


# The Bible Standard

(தமிழ் வெளியீடு)

"உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**
**Translated from B.S. 861**

பொருளடக்கம்


ஜீவனைத் தருகிற ஒரு இரட்சகர் .................. 2

உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள் .......................................... 4

இஸ்ரவேலும் யாக்கோபின் இக்கட்டும்.......... 11

சோதோமின் அழிவு ................................... 14

பரிசுத்த பெரும்பாதை................................. 15



BS Tamil Version - 7

ஜனவரி 2011

# ஜீவனைத் தருகிற ஒரு இரட்சகர்

## A Savior who gives life

*"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" லூக். 2 : 11.*

நம்முடைய பாடமானது, இயேசுவின் பிறப்பு சம்பந்தப்பட்ட ஒரு சுவாரஸ்யமான பாடமாகும். அவர் சாதாரணமான முறையில் ஜெனிப்பிக்கப்படவில்லை என்று வேத வாக்கியங்கள் நமக்கு மிக கவனமாய் சுட்டிக்காட்டுகின்றன – அவருக்கு பூமிக்குரிய தகப்பன் இருந்ததில்லை, அவர் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டார். இதற்குரிய காரணம் வெளிப்படையாயிருக்கிறது. குழந்தையை போஷிக்கும் தாயாக, பரிசுத்தாவி ஜீவனை அளித்தது. அக்குழந்தையை போஷித்தவள் தாய். ஒருவேளை, இயேசுவுக்கு மனுஷீக தகப்பன் இருந்திருந்தால், அவர் களங்கமுள்ளவராயும், அபூரணமானவராகவும், எல்லா மனுஷரைப் போல மரண தண்டனையின்கீழ் இருந்திருப்பார். எந்த அபூரணமான மனிதனும் பூரணமான மனிதனை மீட்டுக்கொள்ள முடியாதென்று சங்கீதக்காரன் கூறுகிறான், "ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி, எவ்விதத் தினாலும் அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங்கூடாதே" (சங். 49 : 7, 8). அப்படி அபூரணராக இருந்திருந்தால், உலகத்தின் இரட்சகராக தமது பங்கின் வேலையை செய்ய முடியாமல் போயிருக்கும். ஆதி தகப்பனாகிய ஆதாமின் ஜீவனுக்காகவும் (மற்றும் அவனது சந்ததியின் ஜீவனையும் கீழ்ப்படியாமையினால் இழந்து போனவற்றிற்காகவும்) மீட்கின்ற பொருளாக தம்முடைய ஜீவனை கொடுக்கத்தக்கதாக, அவனுடைய மீட்கும் பொருளாக, இயேசுவை தேவன் உண்டு பண்ணினார். "அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்து," மரண பாடுகளை அனுபவிக்க, "ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணியிருக்கிறீர்" (எபி. 10 : 5) என்று நாம் வாசிக்கிறோம். ஆகையால் ஆதாமையும் மனுக்குலத்தையும் மீட்க அவர் பூரணமானவராகவும் பாவமில்லாதவராகவும் இருக்க வேண்டியது அவசியமாயிற்று.

இயேசு நல்லவர் என்று நன்றாய் நமது மனதில் பதியவைத்து அங்கீகரித்தது மட்டும் போதாது. அவரில் மனுஷீக பூரணத்துவம் இருந்ததையும், முதல் பூரண மனிதனாகிய ஆதாமின் இழந்து போன ஜீவனுக்காக போதிய ஈடுபலியாக இருந்தார் என்பதை கண்டுகொள்ள வேண்டும். ஒரு ஆள்தத்துவமுள்ளவராக முன்னர் ஜீவித்த நிலையிலிருந்து அவருடைய ஜீவ தத்துவமானது, குழந்தையாக, அவருக்குள் பரிசுத்த ஒளி மாற்றப்பட்டதின் மூலமாக, அவர் பரத்திலிருந்து ஜெனிப்பிக்கப்பட்டார் என்பதை நிச்சயம் கண்டு கொள்ள வேண்டும். அவர் மனுஷனாவதற்கு முன்னிருந்த நிலையை, நமது ஆண்டவர், "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" (யோவா. 17 : 5) என்று ஜெபித்ததிலிருந்து அறிகிறோம். பரி. பவுலும், "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரி. 8 : 9) என்று நமக்கு விளக்குகிறார்.

### நம்முடைய நன்மைக்காக அவர் தரித்திரரானார்

உலகம் முழுவதிலும் மற்றும் யூதேயா முழுவதிலும், வெகு சில குழந்தைகள் மட்டும் இயேசுவைவிட மிக தாழ்மையான இடத்தில் பிறந்திருக்கின்றனர். அரசாங்க உத்தரவின் காரணமாக, குடிமதிப்பு எழுதும்படி தங்கள் சொந்த நகரமாகிய பெத்லகேமிற்கு யோசேப்பும் மரியாளும் சென்றிருந்தனர். இதுபோல, மற்றவர்கள் அநேகரும் இந்த சிறு நகரத்திற்கு வந்திருந்தனர். காலம் வந்தபோது, இயேசு மாட்டு (கால்நடைக்) கொட்டிலில் பிறந்தார். அதனால், யோசேப்பும் மரியாளும் அன்றிரவு அங்கே தங்க வேண்டியதாயிற்று. நம்முடைய பரலோக பிதா தமது குமாரனை நம்மை மீட்கும்படியாக ஏன் தாழ்மையான மற்றும் எதிர்பாராத சூழ்நிலைகளில் அனுப்பினார் என்பதை புரிந்து கொள்வதற்கு பலருக்கு கடினமாக இருக்கிறது என்பது நமக்கு ஆச்சரியமானதல்ல. தெய்வீக திட்டத்தை குறித்த ஆவி உடையவர்களுக்கு மட்டும், பரிசுத்த ஆவியினால் ஒளியூட்டப்பட்டதின் மூலமாக இந்த காரணங்களை மதித்துணர முடியும்.

### பயப்படாதிருங்கள்! – எல்லா ஜனத்திற்கும் – நற்செய்தி

தேவ தூதர்கள் கொண்டுவந்த செய்தியானது நிச்சயமாக தேவ ஆவியினால் ஏவப்பட்ட ஒன்றாகும். அது ஆபிரகாமிற்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களுக்கு முற்றிலும் இசைவுள்ளதாக இருக்கிறது. "எல்லா ஜனங்களும்" ஆசீர்வதிக்கப்படுவார்களென்றும், நன்மையாகவும் மிகுந்த சந்தோஷமானதாகயிருக்கும் என்று நிஜத்தின் விரிவான கருத்தில் ஆபிரகாமிற்கு வாக்களிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்பு, இந்த செய்தியானது பெத்லகேமின் குழந்தையின் மூலமாக, அந்த மிகுந்த சந்தோஷங்கள் (நற்செய்தி) நிறைவேறக்கூடியதாய் இருக்கிறது. "பயப்படாதிருங்கள்" என்று தூதர்கள் அறிவித்தது மிக சுவாரஸ்யமானது. தங்களைவிட வல்லமையான ஏதுக்களாலான தேவதூதர்கள், வருங்காரியங்களைக் குறித்து கூறுபவர்கள் என மனுஷர்கள் உணர்ந்திருக்கிறார்கள். தேவன் மிக கிருபையுள்ளவரென்றும் அன்புள்ளவரென்றும் நம்புவதற்கு அவர்களுக்கு கடினமாக இருக்கிறது. புறஜாதிகளின் தேவர்கள் பயங்கரமானவர்களாயும், அன்பில்லாதவர்களாயும், அன்புகூர இயலாதவர்களுமாய் இருக்கின்றனர். ஆனால்,

**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

எல்லா கிருபைகளின் தேவனானவர், இரக்கங்களின் தேவனாகவும், அன்பின் தேவனாகவும் தம்முடைய பிள்ளை களை உயர்த்துவதற்காகவும் ஆசீர்வதிக்கிறதற்காகவும் தம்முடைய தேவ வல்லமையை பிரயோகிக்க விருப்ப முள்ளவராக இருக்கிறார். ஆகையால், அவருடைய இரக்கத்தி னாலும், அன்பினாலும் தம்முடைய ஒரேபேறான குமாரனை மனுக்குலத்தின் மீட்பராக – அவர் நீதியுள்ளவராக இருக்கிற படியால், அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருக்கிறவர் களை நீதிமானாக்கத்தக்கதாக (ரோம. 3 : 26)– அவரை "எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாக" அனுப்பினார்.

ஒரு இரட்சகர் பிறந்திருக்கிறார் என்ற செய்தி அறிவிக்கப்பட்டது – அவர் அபிஷேகம் பண்ணப்பட்டவரும் ஆண்டவருமாவார். அவர் நிறைவேறுதலான மோசேயாகவும், நிறைவேறுதலான ஆரோனாகவும், நிறைவேறுதலான மெல்கி சேதேக்காகவும், நிறைவேறுதலான தாவீதாகவும் இருக்க வேண்டும். அவர் அடையாளமான பல்வேறு பாத்திரமாக காண்பிக்கப்பட்ட போதிலும், அவர் மகா உன்னதமானவரின் குமாரனானவர். நாம் வெகுகாலமாக எதிர்ப்பார்த்திருக்கிற, நோக்கியிருக்கிற ஜெபித்திருக்கிற புதிய உடன்படிக்கையின் இரட்சகராகவும் – விடுதலையாளராகவும் – மத்தியஸ்தராகவும் இருக்க வேண்டும்.

## "இரட்சகர்"

"இரட்சகர்" என்ற வார்த்தையில் விசேஷ அர்த்தமும் பிரயோகமும் இருக்கிறது. அது ஜீவனை கொடுக்கிறவர் என்று பொருள்படும். சீரியாக் மொழிபெயர்ப்பில் இந்த வார்த்தை "ஜீவனை கொடுக்கிறவர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சீரியாக் போன்ற மொழியை அக்காலத்தில் இயேசுவும் பாலஸ்தீனாவிலுள்ள மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள். "ஜீவனை கொடுக்கிறவர்" என்ற பெயரில் ஏதேனும் விசேஷ மதித்துணர்தல் இல்லையா? மனிதன் எதை இழந்தான்? அவன் திரும்ப பெற விரும்புவது என்னவாக இருக்க வேண்டும்? ஆதாம் ஜீவனை இழந்து, "சாகவே, சாவாய்" என்ற தண்டனையைப் பெற்றான் என்று வேத வாக்கியங்கள் பதிலளிக்கிறது. அவன் பரலோகத்தை இழக்கவில்லை, அவன் பரலோகத்தை உடையவனாக ஒருபோதும் இருக்கவில்லை. அவன் பூமிக்குரிய ஜீவியத்தை இழந்தான், ஏதேனை இழந் தான், மனுஷீக பூரணத்தை இழந்தான். "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே" வந்ததாக இயேசு அறிவித்திருக்கிறார். (மத். 18 : 11; லூக். 19 : 10).

நாம் பார்த்திருக்கிறபடி, இயேசு பூரண மனுஷீக ஜீவன் உடையவராக இருந்தார். அதனால், "தேவனுடைய கிருபையி னால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிப்பார்த்ததின்" மூலமாகவும் பாவிகளுடைய தண்டனையை அனுபவித்ததின் மூலமாகவும், அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் ஆதாமையும் அவனுடைய சந்ததி அனைத்தையும் மீட்டு, விலைகொடுத்து வாங்கி, இழந்து போன எல்லாவற்றையும் மறுபடியும் முழு உரிமையுள்ள பூரண ஜீவனுக்கு திருப்பி நிலைநிறுத்துகிறவரானார். அதனை அவருடைய கையினால் அநேகர் பெறுவார்கள். ஆயிர வருஷத்தின் மேசியாவின் அரசாட்சி காலம் முழுவதிலிலும் விருப்பமுள்ளவர்களையும் கீழ்ப்படிகிறவர்களையும், பாவத்தின் மற்றும் மரண நிலைகளி லிருந்து பூரணத்திற்கும், நித்திய ஜீவனுக்கும், பூமிக்குரிய மனுஷீக ஆசீர்வாதங்களுக்கும் உயர்த்தி, அவர் உலகத்திற்கு ஜீவனைக் கொடுக்கிறவராயிருப்பார்.

ஆனால், நமது ஆண்டவர் சபையாகிய "தெரிந் தெடுக்கப்பட்டவர்களை" – அதாவது, இராஜ்யத்தின் உடன் சுதந்திரவாளிகளான அவருடைய மணவாட்டிக்காகவும் அவர் ஓர் வேலையைச் செய்கிறார். இந்த சபைக்குரிய ஆசீர்வாதமானது, அவருடைய இராஜ்யம் ஆரம்பிப்பதற்கு சற்று முன்பதாக முடிவடைகிறது. சபையானது முன்பு, "சுபாவத்தினாலே மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாய் இருந்தாலும்" இழந்து போனவற்றிற்கு அவர்கள் மறுபடியும் நிலைநிறுத்தப்படுவதில்லை. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளை என்னவென்றால், மீட்பரின் சாயலை உடையவர்களாக மாறவும், தங்களுடைய ஜீவியங்களை அர்பணிக்கச் செய்யவும், அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கவும் அவர்களுக்கு அழைப்புக் கொடுக்கப்பட்டது. அவர்களுடைய குறைபாடுகளை அவர் நிவிர்த்தி செய்து, கிருபையின் பிதாவானவர் அவர்களை அவர்களுடைய ஆண்டவரைப்போல் தெய்வீக நிலைக்கு மாற்றி, தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற பரலோக வாசஸ்தலமாகிய "அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கி," அவரோடேகூடப் பாடுகளை சகித்தார்களானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வார்கள்; அவரோடேகூட மரித்தார்களேயானால், அவரோடேகூட பிழைத்துமிருப்பார்கள் என்ற அழைப்பு கொடுக்கப்பட்டது. (2 தீமோ. 2 : 11, 12).

## அல்லேலூயா கூட்டிசைப் பாடல்

14–ஆம் வசனத்தில் நமக்கு அல்லேலூயா கூட்டிசை போன்ற பாடலும், ஏற்கனவே கூறப்பட்ட தேவதூதனுடைய நற்செய்திக்கு தூதர்கள் மறுமொழியும் கொடுத்தனர். "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று பரலோக தூதர்கள் பாடினார்கள். எத்தகைய சிறப்பானது! எத்தகைய உணர்ச்சிமிக்கது! ஆனால், இந்த மகிமையான காரியம் இன்னும் நிறைவேறவில்லை என்பதை காண்கிறோம். தேவனுடைய மகிமை இன்னும் சரியான முறையில் இன்னும் பூமியில் பரலோகத்தைப் போன்று ஸ்தாபிக்கப்படவில்லை. கிறிஸ்தவ நாடுகள் என்று சொல்லப்படகூடிய நாடுகளில்கூட சமாதானம் இன்னும் நிலைநிறுத்தப்படவில்லை.

காரணம் என்ன? அப்போஸ்தலர் இதைக் குறித்து கூறுகையில், அது இரகசியமென்றும், கடந்த யுகங்கள் மற்றும் நேமகங்கள் முதல் மறைக்கப்பட்டிருந்தது என்கிறார். இரகசியம் என்பது, தேவன் தாம் அபிஷேகம் செய்த இயேசுவை மாத்திரம் கொண்டு உலகத்தை ஆளவும் ஆசீர்வதிக்கவும் சித்தங் கொள்ளாமல், இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடந்த ஒரு கூட்டத்தை முன்குறித்து அவருடனேகூட அவருடைய வேலையில் பங்கெடுக்க செய்வதே அந்த இரகசியமாகும். இந்த சுவிசேஷ யுக முழுவதும் இந்த வகுப்பாரை தெரிந்தெடுக்கும் வேலையே பிரதானமாக இருந்தது. இவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டி என்றும் "கற்புள்ள கன்னிகை" என்றும் அழைக்கப் படுகிறார்கள். இவர்கள் ஆண்டவருடைய இரண்டாம் வருகை யில் "மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியின் மனைவியாக" உடன் சுதந்திரராவார்கள்.

இயேசு கிறிஸ்துவின் மாபெரும் மீட்கும் பொருள் பலியினால் மனுக்குலத்திற்கு விலையேறப்பட்ட பரிசை கொடுத்ததினாலும், அவருடைய உயிர்த்தெழுதலினாலும் மற்றும் அவருடைய மணவாட்டியின் உயிர்த்தெழுதலினாலும் (வெளி. 1: 18) நமது சார்பாக செய்யும் ஊழியத்திற்காகவும், இந்த தருணத்தில் விசேஷமாக தேவனையும் இயேசுவையும் துதித்து நன்றி செலுத்தக்கடவோம்.

***

# உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்

**Be Content With What You Have**

**“எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்” 1 தெச. 5 : 18**

**“உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்: நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு : கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே” – எபி. 13 : 5, 6.**

உலகத்திலுள்ள ஞானமுள்ள மனுஷன், இதனை மோசமான, மிக மோசமான அறிவுரை என்று கூறுகிறான். அமெரிக்காவிலிருக்கும் நாங்கள், இதனை குறித்து கடந்த நூற்றாண்டை ஆராய்ந்தபோது, இந்த அறிவுரை பின்பற்றப்படவில்லை என்பது தெரிகிறது. அமெரிக்காவில் வேலை செய்கிறவர்கள் அதிக ஆசையுள்ளவர்களாகவும், மிக சுறுசுறுப்புள்ளவர்களாயும் தங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணாமல், கடினமாக முயற்சிசெய்து இரண்டு விதமான புல் வகைகளை உற்பத்தி செய்து ஒருவகை வளருவதற்கு முன்பாக வளரும் மற்றொரு புல் வகையை விற்று வங்கி கணக்கில் பணத்தை (10 டாலரை) சேர்க்கின்றனர். நமது தேசம் மிக வேகமாக முன்னேறி இருக்கிறது. அதன் ஜனத்தின் புத்தி நுட்டம், சிக்கனம் மற்றும் முன்னேற்றத்தால் தேசமானது குறிப்பிடத்தக்க நிலையில் உள்ளது.



வழிநடத்தும் கரம்


நாங்கள் உலகப்பிரகாரமான ஞானவானுடைய வாதத்தைக் குறித்து மறுக்கிறதில்லை. ஏனெனில், இந்த நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகள் யாவும் அதிருப்தியினால் மனநிறைவின்மையினால் உண்டானது என்று சொல்லி விட முடியாது, ஆனால் அதில் பெரும்பான்மையானது சுதந்திரத்தையும் சார்ந்ததாயிருக்கிறது. இந்த சுதந்திரமானது, முதலாவதாக அதிகமான விழிப்புணர்வின் காரணமாக வந்திருக்கிறது. இந்த விழிப்புணர்வானது (அறிவு புகட்டுதல்), பெருமளவு வேதாகமத்தை உபயோகிப்பதின் விளைவாகவும் அது ஜனங்களிடையே தங்கள் சொந்த மொழிகளில் வந்திருப்பதினாலும் அவைகளை அவர்கள் கொண்டிருப்பதின் காரணமாகவும் வந்திருக்கிறது. இத்தகைய ஆச்சரியமான வளர்ச்சிகள் கடந்த நூற்றாண்டில் வளர்ந்ததற்கு மற்றுமொரு மூல காரணமுண்டு. அது என்னவென்றால், 1799 முதல், வேத வாக்கியங்களில் சொல்லப்பட்ட “அவருடைய ஆயத்தம் பண்ணும் நாளுக்குள்” நாம் வந்திருக்கிறோம். இந்த காலத்தில், நமது ஆண்டவர் அறியாமையின் திரையை நீக்கிக் கொண்டும், உலகத்தின் மீது வெளிச்சத்தை பிரகாசிக்க செய்து கொண்டும் இருக்கிறார். இவற்றை அவர் இயற்கையான வழிகளில் பூரணத்திற்கு கொண்டுவர வேதியியல், இயந்திரவியல் மற்றும் கலை மூலமாக கண்டுபிடிப்பின் திறமைசாலிகளைக் கொண்டு வெகு காலத்திற்கு முன்பே மிக ஆச்சரியமாக, இம்மானுவேலின் மேற்பார்வையின் கீழ் நடத்தப்படுகிறது, ஆயிர வருஷ அரசாட்சியின்போதும் நடத்தப்படும், அப்பொழுது பூமியானது பரதீசாக மாற்றப்படும். ஆயினும், இந்த குறிக்கோள்களும் போதுமென்ற மனப்பான்மை இல்லாமையும் இருப்பதை நாங்கள் ஒப்புக்கொண்டாலும், அவை மனுக்குலத்தின் ஆசீர்வாதத்திற்காக இந்த பல்வேறு உபகாரணங்களைக் கொண்டுவருவதில் அதற்குரிய உதவியாக இருக்கும் என்று நிரூபிக்கப்படும். மறுபக்கத்தில் மனநிறைவின்மையானது எவ்வளவாய் பரவியிருக்கிறதோ, அதே அளவிற்கு சந்தோஷமின்மையும், அதில் ஓர் அராஜக ஆவியும் பிணைந்திருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

## மனநிறைவின்மை பரவி வருகிறது

அதிருப்தியானது (போதிய மனநிறைவு இல்லாமை) சமுதாயத்தின் முழுவதிலும் ஊடுருவி, ஓய்வில்லாமைக்கும், மகாபெரிய அழிவாகிய உபத்திரவத்திற்கும் அராஜகத்திற்கும் வழிநடத்தும் என்பதை உலக கண்களால் பார்க்கக்கூடியவர் களைவிட நாங்கள் தெளிவாக பார்கிறோம். இதை குறித்து வேத வாக்கியங்கள் இந்த யுகத்தின் முடிவு என்று சுட்டிக்காட்டுகிறது – “யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்” (தானி. 12 : 1; மத். 24 : 21). இந்த மனநிறைவின்மையும் சுயநலமும் வேலைகளிலும், வீட்டிலும், பண்ணைகளிலும், தொழிற்சாலைகளிலும், சபைகளிலும் இருக்கிறதை நாம் காண்கிறோம். எங்கெல்லாம் அதனுடைய சாயல் இருக்கிறதோ அங்கெல்லாம் சிலபேர் நசுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருக்கின்றனர் அல்லது சிறிதளவேனும் காயப்படுத்தப் படுகின்றனர். எங்கெல்லாம் அவை சூழ்ந்திருக்கிறதோ அங்கெல்லாம் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், பக்தியுள்ள சிந்தைகளையும் மங்க செய்கிறது. அவை கிறிஸ்துவினுடைய ஆவி போதிக்கிற நீதிக்கும், பொறுமைக்கும், சாந்தகுணத்திற்கும், சகோதர அன்பிற்கும், அன்பிற்கும் எதிரிடையானவைகள். அவை எதிராளியினுடைய ஆவிகளாகிய கோபத்திற்கும், பகைக்கும், பொறாமைக்கும், பேராசைக்கும், சண்டைக்கும், விரோதத்திற்கும் சார்ந்ததாயிருக்கிறது. மருத்துவ திறன்கள் பெரிதும் வளர்ந்த பின்னும், புள்ளிவிவரப்படி, விசேஷமாக நரம்பு மற்றும் மனம் சம்பந்தமான நோய்களும், அதின் சிகிச்சைகளும், மிக அதிகமாக பெருகியிருக்கிறதை குறித்து ஆச்சரியமாயிருக்கிறது. பிறப்பிற்கும் ஜீவியத்திற்கும் சுமுகமான சூழ்நிலைகள் இருக்கிறபொழுதும், நரம்பு மற்றும்

மன சம்பந்தமான நோய்கள் பெரிதும் பெருகியிருக்கிறபடியால், புத்திசுவாதீனமில்லாதவர்களுக்குரிய விடுதிகளும் விரிவுப்படுத் தப்பட்டும் புதிய விடுதிகள் கட்டப்பட்டும் வருகிறது. இவை அனைத்தும் இந்த (அமெரிக்க) நாட்டில் மட்டுமல்ல; ஐரோப்பாவிலிருந்து வரும் செய்திகளும் இதே போன்றுதான் இருக்கிறது; அங்கேயுள்ள புத்தி சுவாதீன மில்லாமை, தற்கொலைகள் ஆகியவற்றைக் குறித்து பார்க்கும் போது அது இங்கு உள்ளதைக் காட்டிலும் மோசமான நிலைமை களாகவும் காணப்படுகிறது.

செல்வமும் வியாபாரங்களும் உயர உயர, சந்தோஷமானது ஓர் குறிப்பிட்ட அளவில் குறைந்து கொண்டே போகிற காரியத்தை உலகிற்கு சுட்டிக்காட்டுவது உபயோகமற்ற தாகும். தற்போதைய தலைமுறையின் முற்பிதாக்கள் தற்கால அனுகூலங்களில் குறைவுப்பட்டிருந்தாலும், அவர்களுடைய தற்காலத்திய பேரப்பிள்ளைகளைவிட தங்கள் வாழ்க்கையை மிகவும் சந்தோஷத்துடனும் மனநிறைவுடனும் வாழ்ந்தார்கள். மகிழ்ச்சியாக இருந்த பழைய நிலைமைக்கு போக உலகத்திற்கு மனதில்லாமலிருக்கிறது. ஆனால், பிற்காலத்தில் இன்னும் சுகித்திருப்பதற்கு மேலும் அதிகமாக நாடி, அது என்ன விலையாயினும் அதனை அடைந்துவிட போராடுகிறார்கள் அல்லது அவைகளை கொஞ்சமாவது அடையும்படி போராடு கிறார்கள். இதனை குறித்தும், பிற்காலத்திற்குரிய தெய்வீக சிலாக்கியங்களை குறித்தும் நாம் அறிந்திருக்கிறோம். தற்கால மனநிறைவின்மையானது தற்போதைய சமூக காரியங்களின் அழிவால் மனுக்குலமானது ஒரு பெரிய பாடத்தை வெகு சீக்கிரத்தில் கற்றுக் கொள்வார்கள் என்றும், தற்போதைய சமூக காரியங்கள் சுயநலத்தின்மீதும், மற்றவர்கள் பொருட்கள் மீது ஆசையும், குறிக்கோள்கள் மீதும், மனநிறைவின்மை மீதும் கட்டப்பட்டிருப்பதால், அது நாச மடையும்; ஆகையால், உலகத்தை அதின் வழியேயும், அதன் போக்கிலும் விட்டு விடுவதே சிறந்தது என்று நாங்கள் எண்ணுகிறோம். அப்படியே அதின் வழியே விடுவதால் அதன் பலனை அடைந்து, முடிவாக, தேவ பராமரிப்பு அவர்களுக்கு பாடத்தை கற்பிக்கும். அதனால், மனநிறைவின்மையை குறித்த பாடத்தை உலகிற்க்கு நாங்கள் சொல்வது மிகவும் கொஞ்சமே. எங்களுடைய அறிவு ரையின் கீழும் எங்களுடைய குணங்களை ஆராய்ந்தறிந்து மிகவும் நெருங்கி வந்த வர்களுக்கு மட்டும் கூறுவதுண்டு. சுயநலம் மற்றும் மனநிறைவின்மையின் கீழிருக்கும் உலகத்திடம் இந்த கடைபிடிக்க முடியாத காரியத்தை கடைபிடிக்கும்படி முயற்சிக்க நாங்கள் புத்திகூறுவதில்லை. ஆனால் மாறாக ஆண்டவரையும் அவரது அன்பு, சமாதானம் மற்றும் நன்மையின் ஆவியை நாடி, தேடி கண்டுபிடிக்க முயற் சிக்கும்படி நாங்கள் அறிவுரை கூறுகி றோம். ஏனெனில், "போதுமென்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்" "தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்த முள்ளதாகையால், எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" என்று நிரூபிக்கிறது. (1 தீமோ. 6 : 6; 4 : 8).




## போதுமென்ற மனநிறைவை கொடுக்கும் காரியங்கள் யாவை?

ஆவியினால் ஏவப்பட்ட கட்டளைகளும் கடிந்து கொள்ளுதலும் உலகத்திற்கு அல்ல; ஆனால் ஆண்டவருடைய உடன்படிக்கையின் ஜனங்களாக மாறுகிறவர்களுக்கே அனைத்து வேத வாக்கியங்களும் உரியவைகளாகின்றன என்ற நோக்கு நிலையில் இது பார்க்கப்பட வேண்டும். தேவனும் இல்லாத, நம்பிக்கைகளும் இல்லாத பாவப்பட்ட உலகத்திற்கு உண்மையான மனநிறைவில்லை – அவர்களுக்கு இந்த ஜீவியத்திற்குரிய சௌகரியங்களோ அல்லது பிற்கால ஜீவியத் திற்குரிய விலையேறப்பட்ட வாக்குத்தத்தங்களோ இல்லை. தேவனுக்கும் சத்தியத்திற்கும் மனிதனுக்கும் மகா எதிராளியான வன் தவறான போதனையின் கீழ் பலரை – தற்காலத்தில் நிம்மதி இல்லாமல் செய்துவிட்டான். அதுமட்டுமல்ல எதிர்காலத்திலும் அவர்கள் முடிவில்லா காலமாக துன்புறுத்தப்படுதலைக் குறித்தும் அல்லது பல நூற்றாண்டுகளாகவும் ஆயிரக்கணக் கான ஆண்டுகளாக உத்தரிப்பு ஸ்தலத்தில் வாதிக்கப்படு தலையுமே அவர்கள் எதிர் நோக்கியிருக்கும்படியாக தவறான உபதேசங்களால் வழிநடத்திக் கொண்டிருக்கிறான். எத்தகைய பாவப்பட்ட உலகம் இது! அது தாழ்த்தப்பட்டும், மனநிறை வின்மையால், ஆரோக்கியம் குன்றியும், அராஜகம் நிறைந்தது மாய் இருக்கிறதென்பது எத்தகைய ஆச்சரியம்.

ஆகையால், ஒரு கிறிஸ்தவனுக்கு – சத்தியத்தினால் (துப்பறையின் வார்த்தையினால் அல்ல, சத்தியத்தின் வார்த்தை யினால்) ஜெனிப்பிக்கப்பட்ட உண்மை யான கிறிஸ்தவனுக்கு, இந்த காரியங்கள் யாவும் முற்றிலுமாக எவ்வளவு வித்தியாச மானதாக இருக்கிறது! அவன் உலகம் பார்க்கிற விதமாய் பார்க்கிறதில்லை. அதாவது, தேவன் ஏன் உலகத்தின் மீது கடந்த ஆறாயிரம் ஆண்டுகளாக பாவத்தையும் மரணத்தையும் அரசாட்சி செய்ய அனுமதித்திருக்கிறார் என்று சிந்திக்கிறான். அவன் இதற்கு மேலாக வும் பார்க்கிறான். அது என்னவென்றால், தேவன் பாவத்திற்கும் மரணத் திற்கும் அதை சார்ந்த நோய்களும், வலி மற்றும் உபத்திரவங்களையும் அவர் நீதியான தண்டனையாக அனுமதித் திருந்தாலும், அவர் அன்புமிக்கவரும் கிருபையுள்ள வருமாயிருப்பதினால் தெய்வீக தண் டனை யிலிருந்தும், பாவம் மற்றும் மரணத்தின் பிடியிலிருந்தும் முற்றிலுமாக விடுவிக்க, மீட்பை ஆயத்தம் பண்ணியிருக்கிறார் என கண்டு கொள் கிறான். இதற்குரிய மீட்கும் பொருள் ஏற்கனவே செலுத்தப்பட்டாயிற் றென்றும், யேகோவாவினால் பெந்தேகோஸ்தே நாள் அன்று அங்கீகரிக்கப்பட்டுவிட்டது என்பதை அறியவரும்போது அவன் மகிழ்கிறான். அவன் கிருபையின் வசனத் தினால் போதிக்கப்படுகிறான். இந்த மீட்பின் மூலமாக, முதலாவது உலகம னைத்தும் தகப்பனாகிய ஆதாமில் பரீட்சிக்கப்பட்டது போல, கல்வாரியில் இந்த புதிதான பரீட்சையின் சிலாக்கியத்தை மறுபடியும் தனித்தனியாக பெறுவார்கள். இந்த புதிதான பரீட்சையின் வாய்ப்பை "எல்லாரையும் மீட்கும் பொருளாக"

அவர் தம்மையே கொடுத்ததால் கிடைத்தது. மேலும், முழு உலகத்திற்குரிய இந்த பரீட்சையின் தேவன் அருளிய காலத்தை, ஆயிர வருஷ யுகத்தின்போது, பிற்காலத்தில், புதிய உடன் படிக்கையின் நிலைமைகளின் கீழும், கிறிஸ்துவின் மூலமாய் நித்திய ஜீவன் கொடுக்கப்படுதலின் கீழ் நடைபெறும் என்பதை அறிந்துக் கொள்கிறான். "மேலும், ஒரு நாளைக் குறித் திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார்" (அப். 17 : 31) என்று எழுதப்பட்டிருக்கிறபடி நடக்கும்.

இவ்வாறெல்லாம் நாம் அறிந்திருக்கிறபடியால், நாம் நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கை குறித்தும், விழுந்து போனதி லிருந்தும், தற்கால பெலவீனமான நிலைமைகளிலிருந்தும் விடுதலையாக ஏங்கி கொண்டிருப்பதை குறித்தும், தேவனுடைய பிள்ளைகளாக சுயாதீனத்திற்கு (பாவத்திலிருந்து விடுதலை யடைவதற்கு) முழுமையாக விடுபடுவதை குறித்து களிகூருகி றோம். புதிதாக கண்ட நம்பிக்கை குறித்து களிகூர்ந்து கொண்டிருக்கும்போது, மீட்பர் இழந்துபோன யாவற்றையும் திரும்ப கொடுக்கும் காலத்தை (அப். 3 : 19-23) இரண்டாம் வருகையில் ஆரம்பிப்பதற்கு ஆவலோடு எதிர்பார்க்கிறோம். நாங்கள் தெய்வீக நற்குணத்தை மதித்துணர்ந்ததிலிருந்து அது சம்பந்தப்பட்ட கூடுதலான செய்திகளை பெறுகிறோம். அது என்னவெனில், இன்னும் கூடுதலான ஆசீர்வாதங்களில் நாங்கள் பங்கெடுக்கவும், அதை குறித்து அறியவும் அனும திக்கப்பட்டிருக்கிறோம் என்பதே. தெய்வீக வார்த்தைகளின் மூலம் கிருபையின் படிகளானது பின்வருமாறு விளக்கப் பட்டுள்ளது.

(1) முதல்படி விசுவாசமாகும். நீங்கள் ஏற்கெனவே மாபெரும் மீட்கும் பலியை ஏற்றுக்கொண்டுள்ளதால் தேவனுடைய பார்வையில் நீங்கள் நீதிமானாக கணக்கெடுக்கப் படுகிறீர்கள். உங்களுடைய விசுவாசத்தினால், ஆதாமுக் குள்ளான மரண தண்டனையிலிருந்து மட்டுமல்ல, மேலும், விழுந்து போனதின் காரணமாக வந்த உன்னுடைய அபூரணத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டவராக நடத்தப்படுகிறீர்கள். அவைகள் இப்பொழுது "மூடப்படுகிறது."

(2) இவை சரியாக இருந்தால் நீங்கள் இரண்டாவது படியை எடுக்கலாம். உங்களை ஆண்டவருக்கு முழு பிரதிஷ்டையாக ஆட்சேபணையில்லாமல் ஒப்படைப்பதற்கு இதுவே தக்க சமயமாகும். அதாவது, பாடுபடவும், இனி சுகித்திருக்காமல், தற்கால ஜீவியகால காரியங்களை சந்தோஷ மாய் அனுபவியாமல், உனக்கு இருக்கிற எல்லாவற்றையும், உன்னிடத்திலிருக்கிறவற்றையும், ஆண்டவருடைய ஊழியத்திலும், சத்தியத்தின் ஊழியத்திலும், சத்தியத்திற்கு இசைவாகயிருக்கிற எல்லாருடைய ஊழியத்திலும் உன்னை செலவிடவும், செலவிடப்படவும் ஒப்புக்கொடு. (ரோம. 12 : 1).

(3) பல சந்தர்ப்பங்களில் உனக்கு சுட்டிக்காட்டப் பட்டப்படி, இந்த பாதையானது நமது மகா இரட்சகர் நடந்த பாதையைப் போன்றது. இந்த பாதையில் நடப்பது "நெருக்கமான வழியில்" நடப்பது என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. இவ்விதமாக நீங்கள் அந்த பாதையில் தொடர்ந்து கிறிஸ்தவ நடை நடக்க வேண்டும்.

(4) மேலும், இந்த பாதையில் (வழியில்) முடிவுபரியந்தமும் விசுவாசமுள்ளவர்களாய் தொடர்ந்தால், நீ விருப்பமில்லாமல் அஜாக்கிறதையாய் செய்யும் அனைத்து தவறுகளும் உன்னுடைய மீட்பரின் பலியின் புண்ணியத்தால் மூடப்படும் என்ற நிச்சயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இப்பொழுது "அழைக்கப்பட்டவர்கள்" எல்லாரும் மனப்பூர்வமாய் அந்த "அழைப்பிற்கு" கீழ்ப்படிந்தால் அவருடைய பூமிக்குரிய ஆயிர வருஷ இராஜ்யத்தின் சந்தோஷத்திலும் கனத்திலும் மீட்பருடன் பங்குகொள்ளும் சிலாக்கியம் அளிக்கப்படும். கல்வாரியில் செய்து முடிக்கப்பட்ட மீட்பரின் மரணத்தால் வாங்கப்பட்ட அனைத்து கிருபையான நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் உலக மனுக்குலத்திற்கு அளிப்பதில் மீட்பருடன் வருங்காலத்தில் தேவனுடைய பாத்திரங்களாக ஆக்கப்படுவார்கள். ஆதாமுக்குள்ளும் அவனுடைய மீறுதலி னால் இழந்து போனயாவற்றையும், திரும்ப கொடுத்தலில், உலகத்தை சீர்ப்படுத்துவதில் நாம் உதவி செய்பவர்களாக இருப்போம். (அப். 3 : 19-21).

உண்மையான கருத்தில், அதைப் புரிந்து கொள்வதின் மூலமாக, இந்த மகிமையான சுவிசேஷத்தை விசுவாசத்தினால் கேள்விப்பட்டு பெற்றுக் கொண்ட யாவரும் பெரிய ஆசீர்வாதங் களை பெற்றிருக்கிறார்கள். நம்முடைய பாவங்கள் சிலுவை யின் இரத்தத்தின் மூலமாக மன்னிக்கப்பட்டு, ஆண்டவரோடு ஒப்புரவாக்கப்படுவது கிருபையில் நம்முடைய முதல் கிறிஸ்தவ அனுபவமாயிருப்பதால், அந்த பெரிதான ஆசீர்வாதத்தை அளவிடுவதற்கும், புரிந்து கொள்வதற்கும் அரிதாக இருக்கிறது. மேலும், இதற்கும் கூடுதலான ஆசீர்வாதங்கள் 1000 வருஷ யுகம் முடியும் தருவாயில் பெறும்படி சந்தர்ப்பமிருக்கும். அப்பொழுது நித்திய ஜீவனையும் அதன் காரணமாக வரும் முழுமையான சந்தோஷத்தையும் பெறுவதற்கும், நித்தியத்திற் குரிய ஆசீர்வாதங்களை பன்மடங்காக பெறுவதற்கும் "இனி வரும் யுகத்தின்" விளிம்பிற்கு நம்மை கொண்டு வந்திருக்கிறார்.

நம்முடைய இளைப்படைந்த கால்களுக்கு இளைப் பாறுதலாக "நெருக்கமான வழி"யிலிருக்கும் நமது ஆண்டவர் அளித்துள்ள லெகுவான பகுதிகளைக் குறித்து மட்டும் மதித்துணருகிறவர்களாயிராமல், அனைத்து பரீட்சைகளுக்கும், உபத்திரவங்களுக்கும் நன்றியுடையவர்களாயிருக்க வேண்டும். விசுவாசத்தினால், முதலாவதாக நீதிமானாகுதலின் மூலமாகவும், இரண்டாவதாக, பிரதிஷ்டை மற்றும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களின் மூலமாகவும் பற்றுதலாக இருப்போமா னால், மூன்றாவதாக, அவரோடு உடன்படிக்கை செய்திருக்கிறவர் களுக்கும், அதனை நிறைவேற்ற நாடுகிறவர்களுக்கும், தேவனை நேசிக்கிறவர்களுக்கும், அவருடைய காரியத்திற்காக அழைக்கப்பட்டவர்களுக்கும் (ரோம. 8 : 28), அனைத்து காரியங்களும் நன்மைக்கேதுவாக நடைபெற்று வருகிறதென்று ஆண்டவருடைய வார்த்தை உத்திரவாதம் அளித்திருப்பதின் மேல் விசுவாசத்தின் மூலமாக பற்றுதலாக இருக்க வேண்டும். சரியான கருத்தில் பார்த்தோமானால், நமக்கு வருகிற எல்லாவித சோதனைகளும் கஷ்டங்களும் ஆசீர்வாதமாகவும், கிருபையாக வும் இருக்கிறதை காணலாம். அவை நம்மை நம்முடைய தலையானவரும் ஆண்டவருமாகிய அவரிடம் வெளிப்பட்ட அவருடைய குணசாயலில் நாம் சீர் அடைவதற்கும், இராஜ்யத்திற்காக நம்மை தகுதியுடையவர்களாய் மாற்றவும், மெருகூட்டுவதற்கும் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், இதன்

காரணமாக, வேண்டுமென்றே நாம் சோதனைக்குள் நம்மை அகப்படுத்திக் கொள்ளவோ, தவறான போக்கால் துன்பத்தை நம்மீது நாமே கொண்டு வரவோ கூடாது. ஏனெனில், இந்த காரியங்கள் நமக்கு நீதிக்கும் சத்திய நியமங்களுக்குட்பட்டு, பயபக்தியின் வெகுமதிகளாக நம்மிடத்திற்கு வர வேண்டும். இவை தாழ்மை, சாந்தகுணம், பொறுமை மற்றும் அன்பின் ஆவியிலும் அப்பியாசிக்கப்பட வேண்டும். நம்மை சுற்றி ஏராளமான தீய காரியங்கள் இருந்தாலும், தெய்வீக வழிநடத்துதலால் நாம் ஆண்டவருடைய சாயலை பிரதிபலிக்க கூடியவர்களாய் பொருந்துவதற்கு ஆயத்தம் செய்வதிலும், அவருடைய பிரதிநிதிகளாயிருப்பதற்கும், நீதியின் ஊழியக் காரர்களாய் இப்பொழுதும் மற்றும் இதற்குப் பின்னும் இருப் பதற்கு நம்மை தகுதியுடையவர்களாக அவைகள் செய்வதால் நாம் அவைகளைக் குறித்து சந்தோஷப்பட வேண்டும். ஆண்டவரிடமுள்ள விசுவாசத்தின் நிமித்தமாகவும், அவருடைய ஊழியத்தின் நிமித்தமாகவும் நேரிடுகிற சோதனை களிலிருந்தும் கஷ்டங்களிலிருந்தும், துன்பப்படுதல்களி லிருந்தும், பின்வாங்கினாலோ அல்லது அதனை தவிர்த்தாலோ நீதியின் நிமித்தம் துன்பப்படுதலாகிய நமது பிரதிஷ்டையி லிருந்து பின்னிட்டு போக நேடிரிடும்.

## தெய்வீக பராமரிப்புகள் மதித்துணரப்படுவதில்லை

தங்கள் ஜீவியத்தையும், நேரத்தையும், செல்வாக் கையும் அனைத்து காரியங்களையும் அவருக்கு அர்ப்பணித்த கிறிஸ்துவின் நாமம் தரிக்கப்பட்டவர்களுள் வெகு சொற்ப சிலரே இந்த காரியங்களைக் குறித்து அவைகளுடைய உண்மையான வெளிச்சத்தில் மதித்துணர்ந்திருக்கிறார்கள் என்பது வெளிப்படை யாயிருக்கிறது. கிறிஸ்தவ நாடுகள் என்று அழைக்கப் படுகிறவர் கள் மட்டுமல்லாமல் பேர்க் கிறிஸ்தவர்கள் யாவரும் உலக ஜனத்திலேயே மிகவும் அதிருப்தியினர்களாகவும், சந்தோஷ மில்லாதவர்களாகவும் மனநிறைவில்லாதவர்களாகவும் இருக்கின்றனர். ஆண்டவருக்கென்று முழு பிரதிஷ்டை செய்து, நாம் வாழ்கின்ற இந்த ஆச்சரியமான காலத்தை குறித்தும், இழந்து போனதை திரும்ப பெறுவதை குறித்தும் அதின் நோக்கங்களை குறித்த நிகழ்கால சத்தியத்தின் போதிய அறிவை அடைந்து, பின்வரும் மகிமையைக் குறித்தும் தற்காலத்தின் உபத்திரவங்களை குறித்தும் அறிந்திருக்கிற நம்மவர்களுள் சிலர், உலகத்தின் அதிருப்தியினாலும், சந்தோஷ மில்லாதவர்களாகவும், ஓய்வில் லாதவர்களாகவும், தேவன் தம்முடைய ஜனங்களுக்கு கொடுக்கும் இளைப்பாறுதலில் களிகூறாமல், "எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம்" தங்களுடைய இருதயங்களில் ஆட்சி செய்யாமல் இந்த நிலையில் இருக்கிறார்கள். இந்த சமாதானமானது வாழ்க்கையின் மற்றெல்லா காரியங்களையும் உட்படுத்தி ஒழுங்குப்படுத்திக் காத்துக் கொள்ளும்.

சகோதரரே, இந்த காரியங்களை நாம் செய்யலாகாது. உன்னில் ஒரு பகுதியாக அது இல்லை என்பதை பார்த்துக் கொள். நமக்கு தேவையான காரியங்களைப் பெற்றிருப்போம் என்று ஆண்டவர் வாக்களித்திருக்கிறார். தேவையானது இன்னதென்ற பாடத்தை நாம் கற்றோமானால், நம்முடைய உணவுக்காக மிக விலைக்குறைந்த உணவுகளையும், குறைவாக செலவாகும் உணவு வகைகளையும், மலிவான மிக சாதாரணமான உடைகளையும், குறைவான தேவைகளை பூர்த்தி செய்யும் மிக சிறியதும், பார்வைக்கு எளிமையானதுமான வீடு போதுமானது என்று நாம் அறிந்துகொள்வோம். ஆண்டவர் நமக்கு வாக்களித்திருக்கிறதற்கு அதிகமாக, தற்காலத்தில் நம்முடைய தேவைகளுக்கு அதிகமாக நம்மிடம் இருக்கிறவைகளுக்காக இருதயப்பூர்வமாக நன்றி கூறுவோம்.

இந்த காரியங்களை சரியான கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, நம்மிடம் இருக்கிற இத்தகைய காரியங்களை குறித்து முறுமுறுக்கவோ அல்ல அதிருப்தி கொள்ளவோ இடமிருக்கிறதா? ஆண்டவர் நமக்கு வாக்களித்ததற்கு மேலாகவும், அவருடைய தவறாத ஞானமானது நமக்கு உகந்ததென கண்டவற்றிற்கு மேலாக நாம் கேட்பதற்கும், நாடுவதற்கும், அடைய விரும்புவதற்கும் இடமுண்டோ? ஆண்டவருடைய வார்த்தைகளிலிருந்து வரும் இந்த பாடங்களை உண்மையுள்ள இருதயத்தின் நல்ல நிலத்தில் பெற்றுக்கொண்டால், இந்த பாடத்தை ஏற்றுக் கொண்டு நன்கு வெளிப்படுத்துகின்ற எல்லாருடைய ஜீவியங்களுக்கும் அவை வெகு சீக்கிரத்தில் தெய்வீக வெளிச்சத்தின் கீழும், தெய்வீக கிருபையின் ஆசீர்வாதத்தின் கீழும், நூறுமடங்கான சந்தோஷத் தையும், சமாதானத்தையும், நம்பிக்கையையும், மனநிறைவை யும், சந்தோஷத்தையும், அன்பையும், மிக வேகமாக கொண்டுவரும். நல்லதை வெளிப்படுத்துகிற யாவருடைய ஜீவியத்திற்கு கொண்டுவரும். அதன் செல்வாக்கு நம்முடைய குடும்பத்தின் மீதும், உறவினர்கள் மீதும், நம்மை சார்ந்தவர்கள் மீதும் நம்மிடம் இருப்பதைப் போன்ற சந்தோஷத்தை அவர்களுக்கும் கொண்டுவர வழிநடத்தும்.

கடும் வெப்பமாகவோ அல்லது கடும் குளிராகவோ, கடுமையான ஈரப்பதமாகவோ அல்லது கடுமையான உலர்ந்திருக்கிறதெனவோ, கடும் வெளிச்சமாகவோ அல்லது கடும் இருட்டாக இருக்கிறதெனவோ, கடும் பனியாகவோ அல்லது மந்தாரமாகவோ அல்லது அந்தகாரமாகவோ இருக்கிற தென கால சீதோஷண நிலைகளையோ அல்லது வேறு எதையோ பற்றி குறைகூறாமல், நமக்கிருக்கிற சீதோஷண நிலையை குறித்து திருப்தியுடனிருப்போமாக. அதாவது போதுமென்ற மனநிறைவுடன் இருப்போமாக. நாம் அதனை உருவாக்கவில்லை; நாம் அதனை மாற்ற இயலாது. நம்முடைய ஞானமும் அன்பும் நிறைந்த பரம பிதாவானவர் நமக்கு சிறந்ததென கண்டு இப்பொழுது அதனை அனுமதித்திருக்கிறார். அதனால் நாமும் இப்பொழுது அது உகந்ததென கருது வோமாக. அவருடைய தகுந்த காலத்தில் உலக மனுக்குலத்தை அவருடைய கிருபை போய் சேர்ந்து, உயர்த்தி, ஆசீர்வதித்து குணமாக்குவது மட்டுமல்லாமல், மனுக்குலத்தின் வீடாகிய பூமியையும் வந்தடையும். அவருடைய கிருபையானது, அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற "திரும்ப கொடுக்கும் காலங்கள்" வரும்போது பூமியை பரதீஸின் நிலைமைக்கு கொண்டுவரும்.

உன்னுடைய ஆரோக்கியம் சிறப்பாக இல்லாவிட்டால், அதை குறித்து வாழ்நாள் முழுவதும் புலம்பி கொண்டும் வருத்தப்பட்டுக் கொண்டும் இருக்க வேண்டாம். இதற்கு நன்றியுடனிருக்கவும், விழுந்துபோன சந்ததியின் ஒரு அங்கத் தினராக இருக்கிறதினால் மரண துன்பமும், வலியும் உனக்கு எதிராக பாவத்தின் முழு தண்டனையாயிருக்கிறதென்று நினைவு கூர்ந்து அது மிகவும் மோசமானதாக இல்லாமல் இந்த

அளவிற்காவது இருக்கிறதற்காக நன்றியுடனிரு. உங்களிடம் இருப்பது எதுவாயிருந்தாலும், ஒருவேளை உனக்கு மிதமாகவோ அல்லது சகித்துக் கொள்ளக்கூடிய அளவிற்கோ அல்லது சிறிதளவே சந்தோஷமிருந்தாலோ, உன்னால் முடிந்தமட்டில் மிகுந்த ஸ்தோத்திரத்துடனும், மிகுந்த நன்றி யறிதலுடனும் இரு. அத்துடன் இயன்றதை முடிந்த மட்டிலும் சிறப்பாக செய்.

நம்முடைய பாட வசனம் நமக்கு ஆவிக்குரிய ஆரோக்கியத்தையும், கர்த்தருக்குள் சந்தோஷத்தையும் கொடுக்கும் ஓர் நல்ல மருந்தாக அமைவதுமட்டுமல்லாமல், நம்முடைய மாம்ச ஆரோக்கியத்திற்கும் கூட மிகவும் பிரயோஜனமானதாக இருக்கிறது. பெரும்பாலான ஜனங்களுக்கு தங்களுடைய மனதின் எரிச்சலினாலும் நிம்மதியில்லாமை காரணமாகவும் அவர்களுக்கு மாம்ச பிரச்சனைகளும் வியாதிகளும் மிகுதியாயிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். நீ, ஆண்டவருடைய பிள்ளைகளில் ஒருவனாயிருந்தால், என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று புறஜாதிகள் (தேவனை அறியாத, அவருடைய உடன்படிக்கைக்குள் இல்லாத ஜனங்கள்) தேடி நாடுவது போல் நாம் இருக்க வேண்டாம். ஏனெனில் நமக்கு தேவையானது இன்னதென்று நாம் கேட்பதற்கு முன்னதாகவே நமது பரமபிதா அறிந்திருக்கிறார் என்று நெருக்கமான வழியில் சென்ற நமது மீட்பரும், எஜமானரும் முன்னோடியவருடைய வார்த்தைகளை நினைவு கூருவோமாக. மேலும் நமக்கு எது சிறந்ததென்று நமது பரமபிதா எண்ணியிருக்கிறாரோ, அதை ஏற்கெனவே வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்.

ஒருவேளை உன்னுடைய ஜீவியத்தின் நிலை ஏழ்மையானதாக இருந்து, தேவையான காரியங்களை பெறுவதற்கு தொடர்ந்தேர்ச்சியாக கடினமாக உழைக்க வேண்டியிருந்தால், அதை குறித்து புலம்பாமல், மாறாக, உழைப்பதற்கு தேவையான ஆரோக்கியத்தையும் பெலனையும் குறித்து நன்றி செலுத்து. தற்கால ஜீவியமானது ஒரு படிப்பினையின் காலமென்றும், இப்பொழுதுள்ள பாடங்களை சரியாக கற்றால், உலகம் கொடுக்க முடியாததும் எடுத்து போட முடியாததுமாகிய மகிமையையும் கிருபையின் ஐசுவரியங்களையும், கொண்டுவரும் என்பதை உணர்ந்து கொண்டதற்காகவும் நன்றி கூற வேண்டும். உன்னுடைய நிலையை மற்றொரு பக்கத்தில் பார்க்கும்போது, நல்ல உத்தியோகத்திலும் அதிகமாய் செழித்திருக்கிற மற்றவர்களைவிட உன்னுடைய நிலை மிக அனுகூலமனதாக இருக்கிறதென்ற உண்மையை சிந்தித்துப்பார். ஐசுவர்யங்களும் ஓய்வு நேரங்களும் மிகுதியாயிருக்கிற தங்களிடம் சாபம் இருக்கிறதென கண்டுபிடித்தவர்கள் எத்தனை பேர்! "நெருக்கமான வழி"யில் செல்ல உதவிகரமாயிருப்பதற்கு பதிலாக, இந்த ஐசுவரியம் மற்றும் அதின் பெருமையின் வஞ்சகமானது, தங்களுக்கு தடங்கல்களையே உண்டு பண்ணுகிறதென்பதை ஐசுவரியத்தினால் சபிக்கப்படாத எத்தனை பேர் அதனை கண்டிருக்கிறார்கள்! "ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளின் அர்த்தத்தை கண்டுபிடித்தவர்கள் எத்தனை பேர்! தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களில், ஐசுவரியவான்கள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, கல்விமான்களும் அநேகரில்லை என்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகளை நினைவு கூருங்கள். இந்த உலகத்தின் எளியவர்களே விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், இராஜ்யத்தை சுதந்தரிக்கிறவர்களுமாய் இருக்கிறார்கள். ஆவியின் கனிகளோடு கூட விசுவாசத்தில் ஐசுவரியமும், நம்பிக்கையில் ஐசுவரியமும், மனநிறைவில் ஐசுவரியமும், தேவ பக்தியில் ஐசுவரியமாக சேர்ந்து இருப்பதே உண்மையான ஐசுவரியமாகும். தேவனுடைய ஞானத்தினாலும் கிருபையினாலும் அவர் உங்களை தயவாக பாதுகாத்தமைக்காக நன்றி செலுத்துங்கள்.

## "ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணும்"

நம்முடைய காரியங்கள் சம்பந்தப்பட்ட எதுவாயிருந்தாலும் இந்த தத்துவமானது அவை எல்லாவற்றிற்கும் சரியாக இருக்கிறது. ஆண்டவருடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களாக மாறியவர்களுக்கு இந்த விசுவாச பாடமானது வெறும் போதனைகளிலும், கோட்பாடுகளிலும் மட்டும் விசுவாசமுள்ளவர்களாயிராமல், உண்மையில் விசேஷமாக இந்த விசுவாசத்தில் உறுதியுடனிருக்கிறார்கள். அவர் எதை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறாரோ அதை அவர் நிறைவேற்றுவதற்கு ஆற்றலுடையவராயும் ஆயத்தமுள்ளவராயுமிருக்கிறார் என்று தேவனிடம் நம்பிக்கை கொண்டிருப்பதே விசுவாசத்தின் முக்கிய அம்சமாகும். இந்த விசுவாசமானது வரபோகிற காரியங்களை குறித்து மட்டுமல்லாமல், தற்கால காரியங்களிலும் பற்றிக் கொண்டிருக்கிறது. இந்த விசுவாசமானது, நித்திய ஜீவன் பரிசாக அளிக்கப்படப்போகிறது என்பதை உணர்ந்து அதினிமித்தம் மட்டும் களிகூராமல், எல்லாவிதத்திலும் ஞான முள்ள பிதா நமக்கு சிறந்ததென கண்டு அனுமதித்த உபத்திரவங்களிலும், பரீட்சைகளிலும் கஷ்டங்களிலும் அனைத்துவிதமான ஐசுவரியமான அனுபவங்களிலும் களிகூருகிறது. அப்போஸ்தலர் அறிவுறுத்துவது போல, "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்" (1 தெச. 5 : 18; எபே. 5 : 20).

தேவனிடம் தொடர்ந்தேர்ச்சியான நம்பிக்கையுடன் இருக்கும் இந்த உண்மையான விசுவாசத்திற்கான சிறந்த உதாரணமானது நம்முடைய அன்பான மீட்பரின் அனுபவங்களிலும் அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்திலும் காணப்படுகின்றது. அவர் இந்த உலகிற்கு தேவ திட்டத்திற்காக ஊழியம் செய்யும் நோக்கத்திற்காக வந்தார் என்பதை உணர்ந்ததுடன், அவருடைய அனைத்து அலுவல்களிலும் தேவ ஞானமானது தொடர்ந்து கண்காணித்ததை அவர் உணர்ந்திருந்தார். அவர் அடிக்கடி பிதாவிடம் ஜெபத்தில் தரித்திருந்ததுமட்டுமல்லாமல், வழிநடத்துதலுக்காக தேவனுடைய வசனத்தையும் நாடினார். அவர் ஒவ்வொரு அனுபவங்களின் வழியாய் தேர்ச்சிபெற்று, அவர் சந்தித்த அனைத்துவித எதிர்ப்புகளின் மூலமாகவும், அவர் தேவ கண்காணிப்பின் கீழ் தாம் இருக்கிறதாக உணர்ந்து கொண்டார். அவர் தம்மை முழுவதுமாக பிதாவிற்கு பிரதிஷ்டைய செய்திருந்தார் என்பதையும், தன்னுடைய சுயசித்தத்தை நாடாமல், தன்னை அனுப்பினவருடைய சித்தத்தையே நாட வேண்டும் என்பதையும் அவர் அறிந்தி ருந்தார். ஆகையால், பிதாவினுடைய பராமரிப்பு, அவருடைய ஜீவியத்தின் அனைத்து அலுவல்களிலும் கண்காணித்ததை அவர் அறிந்திருந்தார்.

இது அவர் பிலாத்துவிடம் பதிலளித்ததில் மிகத் தெளிவாக வர்ணிக்கப்பட்டுள்ளது. “உன்னை சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலை பண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா” என்று பிலாத்து அவரிடம் சொன்னான். இயேசு பிரதியுத்தரமாக, “பரத்திலிருந்து உமக்கு கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது” என்றார். மேலும், அவரது பாடுகள் மற்றும் அவமான பாத்திரத்தை குறித்து அவர் கூறியதாவது, “பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?” என்றார். ஒவ்வொரு விஷயத்தில் பிதாவானவர் தன்னை நடத்துகிறார் என்று அவர் உணர்ந்து கொண்டதால் உண்மையில், அது அவருக்கு போதுமானதாக இருந்தது. இந்த சிந்தனையானது அவரை பாடுபடுவதற்கும் சகிப்பதற்கும் தைரியத்தை கொடுத்தது. நம்மை நேசித்து நமக்காக மரித்த அவரின் மூலமாய் ஜெயம் பெற்றவர்களாக வரும் யாவருக்கும் தேவ பராமரிப்பில் இதே போன்ற நம்பிக்கை அவசியமாயிருக்கிறது. அவருடைய அழைப்பின் பிரகாரமாக, நம்மை தேவனுக்கு முழுமையாக ஒப்புகொடுத்திருக்கிறோம் என்ற நிச்சயத்தை உடையவர்களாயிருந்தால், நமது நன்மைக்கேதுவாக அனைத்து காரியங்களும் நடைபெற்றுவருகிறதென்ற நிச்சயத்தையும் நாம் உணரலாம், நமது ஜீவியத்தின் ஒவ்வொரு எதிர்பாராத சூழ்நிலை களிலும் பிதாவானவர் ஓர் பாத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறார், அதில் நாம் பானம் பண்ணும் பொழுது நம்மை ஆதரித்து ஆசீர்வதிப்பார். பரம பிதாவின் பிரதிநிதியாகிய நமது ஆண்ட வராகிய இயேசு நம்முடைய பரீட்சைகளையும் அவமானங்களை யும் பாடுபடுதலையும் மேற்பார்வையிடுகிறார். அவர் குருடரான சாத்தானின் ஊழியக்காரர்கள் மூலமாய் இந்த பாத்திரத்தை நமக்காக ஆயத்தமாகும்படி அனுமதிக்கிறார். இந்த அறிவானது நமது உடைமைகள் (விலையேறப்பட்ட ஏதுவாயிருந்தாலும், செல்வாக்கு, நற்பெயர் போன்றவைகள்) அழிக்கப்படும் போதுகூட அதனை சந்தோஷமாக எடுத்துக் கொள்ள சக்தியளிக்கிறது. அதுமட்டுமல்லாமல், நம்முடைய பாடுகளின் பாத்திரத்தை நமக்கு ஆயத்தம் செய்யும் குருடராக சாத்தானின் ஊழியக்காரரிடம் அன்போடும், சாந்தத்துடனும், மன்னிப்பின் ஆவியோடும் நாம் அவர்களை நடத்த இந்த அறிவானது நமக்கு சக்தி அளிக்க வேண்டும். இராஜ்யத்தை நோக்கி பார்த்து கொண்டிருக்கிற உண்மையிலேயே பிரதிஷ்டை செய்தவர்களை தவிர ஒருவரும் இந்த விசுவாசத்தின் நம்பிக்கையை பெற்றிருக்க முடியாது.

## “விசுவாசத்தின் பலம் என்ன?”

நமது பாடவசனத்தில், “உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்” என்று அப்போஸ்தலர் நமக்கு சொன்ன பிற்பாடு, அவர் கூடுதலாக இந்த அறிவுரை கொடுக்கப்பட்டதின் அடிப் படை காரணத்தை விவரிக்கிறார். அது என்னவெனில், “நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே” என்பதாகும். ஆம்; இதுவே மனநிறை வின் உண்மையான ஆதாரமாயும், தேவனுடைய அரவ ணைப்பை உணருவதற்கும், நம்மீது தேவனுடைய ஞானமும் கிருபையும் பிரயோகிக்கப்படுதலை குறித்தும், நமக்கு சிறந்ததான காரியங்களையே அவர் அனுமதிக்கிறார் என்பதை அறியவும், ஒரு விஷயத்தின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் நமக்கு போதிய ஞானமும் நுண்ணறிவும் இருந்தால் நாம் நமக்கென்று எதை தெரிந்தெடுத்திருப்போம் என்பதை உணர்ந்து கொள்வதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும், “அதனாலே நாம் தைரியங்கொண்டு : கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே” என்று அப்போஸ்தலர் கூறுகிறார். முழு உலகமும் தேவனுடைய ஜனங்களாகிய தாழ்மையானவர்களுடைய புத்தியுள்ள தைரியத்தைக் கண்டு வியந்திருக்கிறது. கர்த்தர் தமது அளவில்லாத ஞானத்தோடும் அன்போடும் நமக்கு உதவி செய்கிறவராக இருக்கிறார் என்றும் சகலத்தையும் நமது நன்மைக்கு ஏதுவாக ஆக்க திராணியுள்ளவரும் விருப்பமுள்ளவராகவும் இருக்கிறார் என்ற இந்த நம்பிக்கையே நமது தைரியம் மற்றும் பலத்திற்கான இரகசியமாகும்.


ஏசா. 11 : 6

“ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்”

இங்கே இப்பொழுது விவரிக்கப்பட்டது போன்ற சாராம்சம் வேறே முந்திய தலைப்புகளிலும், கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் அன்பின் ஆவியையும் பல்வேறு ஆவியின் கனிகளையும் அதிகமதிகமாக விருத்தி செய்வதற்கும், சுயநலத்தின் ஆவியையும், அத்தகைய தீய ஆவியின் கனிகளையும் நிர்மூலமாக்குவது போன்ற ஒரே மாதிரியான கட்டுரைகளுக்கு ஏன் இவ்வளவு அதிக கவனம் செலுத்தப்படுகிறது என்று சிலர் வியக்கலாம். ஏனென்றால், இந்த பாடங்கள் இப்போதைய காலத்தில் படிப்பதற்கு விசேஷமாக ஏற்றதாய் இருக்கிறது என்று பதிலளிக்கிறோம். தேவன் தம்முடைய கிருபையினால் நமது மனதிலிருந்து அநேக குருட்டாட்டத்தமான தப்பறைகளை நீக்கியிருக்கிறார். அவருடைய மகிமையான ஏற்பாடுகளை குறித்த தெளிவான நுண்ணறிவையும் கொடுத்திருக்கிறார். அவருடைய ஏற்பாடுகளோடு தொடர்புடைய அவருடைய மகிமையான குணத்தையும் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். முழுமையான அறிவைக் கொண்டு வேதாந்த (மத) சாஸ்திரத்தைப் படிப்பதால், அதில் ஏறக்குறைய சற்று ஆபத்தும் இருக்கிறது; சுவிசேஷத்தின் மைய நோக்கமானது கண்களுக்கு புலப்படாமல் போகலாம். ஓர் அறிவுள்ள ஜனத்தை மட்டும் கண்டு பிடித்து, அந்த ஜனத்திற்குமட்டும் தம்முடைய ஏற்பாடுகளைக் குறித்து போதிப்பது தேவனுடைய நோக்கமல்ல. ஆனால் அதற்கு மாறாக சத்தியத்தினால் ஒரு ஜனத்தை மட்டும் பரிசுத்தமாக்கி, பாவமும் மரணமும் பங்கு பெறாத, நீதியுள்ள நித்திய இராஜ்யத்தில் அவர்களுக்குரிய ஸ்தா னத்தை பெறுவதற்கு தகுதியாக்குவதே அவருடைய நோக்கமாக இருந்தது. தேவன் தம்முடைய ஜனங்களுக்கு தீர்மானித்திருக்கிற பரீட்சையானது

கோட்பாடுகள் சம்பந்தப்பட்ட பரீட்சை களாய் மாத்திரம் இருப்பதில்லை. ஆனால் அதற்கு மேலாக, சத்திய அறிவிற்கு கொண்டுவரப்பட்டவர் களுக்குள் அறுவடை கொழித்தல் களினாலும் பிரிக்கப்படுதலினாலும் குணசாயல் மற்றும் ஆவியின் கனிகள் சம்பந்தமான பரீட்சைகளே அதிகமாக இருக்கும் என நாங்கள் அதிகமதிகமாக எதிர்பார்க்கிறோம்.

ஓர் குறிப்பிட்ட காரியங்களை குறித்து நீ அறியாத வனாயிருந்தால், நீ அவருடையவன் அல்லவென்றோ, அல்லது நீ விசேஷ அறிவைப் பெற்றதால், நீ அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவன் என்பதோ கர்த்தரின் இறுதியான முடிவு அல்ல. ஆனால் மாறாக, "கிறிஸ்துவின் ஆவி [மனச்சார்பு, மனம்] இல்லாதவன் அவருடையவனல்ல" என்பதே சரியாகும். அன்பான வாசகர்களே, நாம் அதில் சரியாக இருக்க வேண்டும். சிலுவை வீரர்களாகிய நமக்கு இது மிகவும் இன்றியமை யாததாகும். ஏனெனில், சிலுவை வீரர்களாகிய நாம் இரட்சிப்பென்னும் தலைச்சீராவாகிய அறிவின் கவசத்தை தரித்திருப்பதுமட்டுமல்லாமல், நீதி, சத்தியம், நற்குணம், தூய்மை ஆசியவற்றின்மேல் கொண்டுள்ள அன்பாகிய இருதயத்தின் கவசத்தை விசுவாசத்தின் கேடகத்தோடு தரித்துக் கொள்ள வேண்டும். நமக்கு முன்பாக இருக்கிற இந்த நீதியின் மார்க்கவசமானது, நமக்கு முன்பாக இருக்கிற யுத்தத்தில் நமக்குள்ள போராயுதங்களில் முக்கியமான ஒன்றாக காணப் படுவது நீதியென்னும் மார்கவசமே ஆகும். ஏனெனில், இந்த யுகத்தில் நமது கர்த்தர் ஆயிரம்பேர் விழுவார்கள் என்று அது சம்பந்தமாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. (சங். 91 : 7; மத். 24 : 24; 2 தெச. 2 : 11).

அதுமாத்திரமல்ல காலம் மிக கொஞ்சமாயிருக் கிறதினால், இந்த பாடமானது மிக முக்கியமானதாக இருக்கிறதென்று நாங்கள் நம்புகிறோம். தேவனுடைய ஜனங்களில் யாராவது இந்த மனநிறைவின் ஆவியையும், ஸ்தோத்திரஞ்செலுத்துதலையும் உடனே வளர்க்க ஆரம்பிக்கவில்லையென்றால் அவர்கள் இராஜ்யத்திற்கு தகுதியற்றவர்களாக ஆவார்கள். அதுமட்டுமல்லாமல், மனநிறைவில்லாத உலகத்தின் ஆவிக்கு பங்குள்ளவர்களாகவும், இப்பொழுது மனித சமுதாயத்தில் வெளிப்படுகிற மகா உபத்திரவ காலத்தில் உலகத்தோடு சேர்ந்து பெரிதான துன்பத்திற்குள்ளா வார்கள். மனநிறைவும் விசுவாசமும் தேவ பக்தியை வளர்ப்பதற்கு மிக அவசியமானவையாகும். போதுமென்ற மனநிறைவை வளர்க்காமல் யாராவது தேவபக்தியை வளர்ப்பதற்கு போராடினால், நிச்சயமாக அவர்கள் அதில் தோல்வியடைவார்கள். மனநிறைவின்மை என்ற களைகள் நிறைந்த ஆத்துமாவாகிய தோட்டத்தில், தேவ பக்தியும், ஆவியின் கனிகளும், தாழ்மையும், பெறுமையும், சாந்த குணமும், நீடிய பொறுமையும், சகோதர அன்பும், அன்பும் வளர மாட்டாது. மனநிறைவின்மை என்ற இந்த களையானது, பலத்தினை உறிஞ்சி அதன் நச்சுத்தன்மையால் ஆத்துமாவாகிய தோட்டத்தை மாசுப்படுத்திவிடும்.

நம்மிடம் உள்ள விலையேறப்பெட்ட பாடல்களில் ஓர் உணர்வுபூர்வமான பாடலை சுட்டிகாட்ட விரும்புகிறோம். எங்களுக்காகவும், தேவனுடைய ஜனங்கள் அனைவருக் காகவும், மனநிறைவுடனும் பிரதிஷ்டையிலும் விசுவாசத்தின் நிலையிலிருந்து ஆவியோடும் புரிந்து கொள்ளுதலோடும் இருதயத்திலிருந்து இந்த பாடலை பாடுவதற்கு நம்மை அனுமதிக்கிறது என்று நினைக்கிறோம். அது பின்வருமாறு : "என்னுடையதெல்லாவற்றையும் அவருடைய சித்தத்திற்கு விட்டுவிட்டு அவருடைய முகத்தை கவனிப்பதிலேயே மனநிறைவோடு இருப்பேன். சீதோஷண மாற்றமோ இட மாற்றமோ எதுவாயிருந்தாலும் அவை என் மனதில் எவ்வித சஞ்சலத்தையும் ஏற்படுத்த முடியாது. அவருடைய அன்பின் நறுமணத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டால் அரண்மனையும் அற்பமானதாகுமே. இயேசு எப்பொழுதும் என்னோடுகூட இருந்தால் சிறைச்சாலைகளும்கூட அரண்மனைகளாகுமே." நமக்கு இத்தகைய பரீட்சைகளை வைக்க வேண்டாம் என்று ஆண்டவரிடம் யார் சொல்லக்கூடும்? கவிஞர் இங்கே குறிப்பிடுவது போல, இவை அனைத்தும் விசுவாச மார்க்கத் தாருக்கும் தனக்கும் பொருந்தும் என்கிறார். சிறு காரியங்களில் நாம் விசுவாசமுள்ளவர்களாக இருக்க கற்றுக் கொள்ள வில்லையானால், பெரிய காரியங்களிலும் விசுவாசமுள்ளவர் களாக இருக்க மாட்டோம் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகையால் நாம் ஒவ்வொருவரும், வாழ்க்கையின் மிக அற்பமான காரியங்களிலும் மனநிறை வுடனான தேவ பக்தியோடுகூட இசைவாக, தன்னுடைய ஜீவியத்தில் மாற்றமடைவதை ஆரம்பித்து நம்பிக்கையுடன் தொடர்வோமாக. அப்படிப்பட்டவன் தற்காலத்தில் தன்னையும் மற்றவர்களையும் சந்தோஷப்படுத்துகிறான். அதுமட்டுமல் லாமல் தேவன் பின்னால் தரபோகிற பெரிய பரீட்சைகளுக்கும் சோதனைகளுக்கும் தன்னை ஆயத்தப்படுத்தி, உலகத்தையும் அதின் ஆவியையும் எவ்வளவாய் நாம் மேற்கொள்ளுகிறோம் என்று நிரூபிப்பதற்கும், அவன் தன்னையே ஆயத்தப் படுத்துகிறான்.

"நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." ஏனென்றால், தேவனுக்கும் அவருடைய காரியத் திற்கும் முழு உண்மையாயிருப்பதின் அஸ்திபாரம் விசுவாசத்தில் தான் இருக்கிறது. நம்முடைய காரியங்கள் அனைத்திலும் தேவனுடைய மேற்பார்வையில் விசுவாசம் வைப்பதென்பது, சமாதானத்தையும் போதுமென்ற மனநிறைவையும் கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல், அனைத்து சுயநல குறிக்கோள் களுக்கும், வீண் மகிமைகளுக்கும், வீண் பெருமைகளுக்கும் இருக்கிற வேரை அழித்துப் போடுகிறது. அது ஏனென்றால், "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்ற தேவனுடைய வார்த் தையில் நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம். தேவனுடைய மேற்பார்வையில் விசுவாசமாயிருப்பது என்பது தேவனுடைய ஒழுங்குகளைக் குறிக்கிறது. தேவனுடைய ஒழுங்குகளின்படி இந்த தற்காலத்தில் நாம் பாடுபடுகிறோம், அதைத்தொடர்ந்து மகிமையானது நமக்கு பின்வரும். இது இருமாப்படையாது; ஆனால் நமது மீட்பரின் குணசாயலில் நம்மை வளர்க்கும்.

***

# இஸ்ரவேலும் யாக்கோபின் இக்கட்டும்

## ISRAEL AND JACOB'S TROUBLE

இஸ்ரவேலையும், பாலஸ்தீனாவையும் மற்றும் ஆமோஸ் தீர்க்கதரிசியின் செய்தியையும் நாம் முதலில் இங்கு கலந்தாலோசிக்கலாம். "அந்நாளிலே விழுந்துப்போன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய் போனதை சீர்ப்படுத்தி, பூர்வ நாட்களில் இருந்ததுப் போல அதை ஸ்தாபிப்பேன் என்று இதை செய்கிற கர்த்தர் சொல்லுகிறார். என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பை திருப்புவேன். அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி அவைகளில் குடியிருந்து திராட்சைத் தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய கனிகளை புசிப்பார்கள்". இந்த வார்த்தைகளை கவனியுங்கள். "அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன். நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்" (ஆமோஸ் 9 : 12, 14, 15) .

எந்த தேசத்தை தேவன் ஆபிரகாமிற்கும் அவன் வித்திற்கும் வாக்குத்தத்தம் செய்து, அதன் பின்னர் ஈசாக்கிற்கும், யாக்கோபிற்கும் உறுதிப்படுத்தினாரோ அதே தேசமே இஸ்ரவேல் என்ற ஒரு தேசமாக பிறந்தது. இப்போது நீங்கள் அறிந்துள்ளபடி இஸ்ரவேலர் தேவனுக்கு பிரியமான காரியங்களை செய்துள் ளனர். ஆனாலும் சில சமயங்களில் அவர்கள் அவைகளை செய்யவில்லை. தங்களுடைய அக்கிரமங்களுக்காக இவர்கள் தேவனிடத்திலிருந்து சிட்சைகளைப் பெற்ற காலங்களும் உள்ளன. இதைக்குறித்து ஆமோஸ்3 : 2-ல் "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துக் கொண டேன். ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினி மித்தமும் உங்களை தண்டிப்பேன்" என்று நாம் வாசிக்கின்றோம். இது புதுமையாக காணப்படுகிறதில்லையா? ஏனெனில் ஒருபுறம் தேவன் தமது ஜனங்களான இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதாகவும், மறுபுறம் அவர்கள் தவறு செய்யும் போது தண்டிப்பேன் என்றும் சொல்லுகின்றார்.

இந்த பிரகாரமாகவே தேவனுடைய தயவு அவருடைய ஜனங்களுக்கு காட்டப்பட்டது. இதேப் போலவேத்தான் நாமும் அவர் நியமித்திருக்கும் சத்தியம் மற்றும் நீதியிலிருந்து வழிவிலகிப் போகும்போது அவர் சொன்னது போல அவருடைய தயவும் மாறுபடும். ஆக இஸ்ரவேலரை தேவன் ஆசீர்வதித்தார். அவர் தாம் நியமித்த தூதரை அவர்களிடத்தில் அனுப்பினார். அந்த நியமிக்கப்பட்ட தூதரே அவர்களுடைய மேசியா ஆவார். மேசியா அவர்களிடத்தில் சொல்லிய சுவிஷேச செய்தியை அவர்கள் நிராகரித்தனர். நமது ஆண்டவரை சிலுவையில் அறையும்படி வற்புறுத்தினர்.

நமதாண்டவரை சிலுவையிலறைய வேண்டும் என்று இஸ்ரவேலர் அமளி செய்த போது பிலாத்து அவர்களிடமாக சொன்னதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா? "அவன் தண்ணீரை அள்ளி ஜனங்களுக்கு முன்பாகக் கைகளை கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்றான் (மத் 27: 24). உண்மையில் அவன், தெய்வீக தீர்ப்பின் தண்டனையின் பாகத்திலிருந்து விடுவிக்கப்படவில்லை என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அங்கு கூடியிருந்த யூதர்களும் என்ன சொன்னார் கள்? "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்றார்கள் (வச. 25)

பூமியின் குடிகளில் எந்த ஜனங்களும் அடையாத அளவிலான துன்பங்களை யூத ஜாதியினர் அடைந்தனர். ஏன் இப்படி நடந்தது என்றும், ஏன் இவ்வளவு அதிக காலம் என்றும், ஏன் ஒரு கால அளவு வரை தண்டிக்கப்பட்டனர்? என்றும் ஒருவர் கேட்கலாம். இந்த காரணத்தினால்தான் என்பது வெளிப் படையாக உள்ளது. தங்களுக்கான தேவனுடைய தயவிற்கு எதிராக இவர்கள் பாவம் செய்த காரியங்களால் இவை விளைந்தன. ஆகையினாலே நீதிக்கும் கிருபைக்கும் விரோதமாக கலகம் செய்ததினால் குறிப்பிட்ட காலம் தேவன் இவர்களை தண்டித்தார்.

நமதாண்டவரின் சிலுவை மரணம், அந்த சமயத்தில் யூதர்கள் அவருடைய மரணத்திற்காக செய்த கலகம், மற்றும் தங்களுடைய மேசியாவையே மையமாக வைத்துசொல்லப்பட்ட சுவிஷேச செய்தியை நிராகரித்தலுமான இவை அனைத்துமே இவர்களுக்கு மிகுதியான வீழ்ச்சியை கொடுத்தது. இவர்கள் மேசியாவையும், அவர் பிரசங்கித்த செய்தியை ஏற்றுக் கொண்டிருந்தார்களேயானால், 1,44,000 பேரை கொண்ட மணவாட்டி சபை அங்கத்தினர்கள் எவ்வித சந்தேகமும் இல்லாமல் அந்த ஜனத்திலிருந்தே எடுக்கப்பட்டிருப்பார்கள். (வெளி. 7 : 4). எவ்விதத்திலும் ஒரு புறஜாதியாரும் அதில் இருந்திருக்கவே முடியாது. அவர்கள் அவரை நிராகரித்தப் படியினால் தேவன் இவர்களை தள்ளினார். கி.பி. 69 மற்றும் 70 – ல் ரோம இராணுவம் உள்ளே புகுந்து பாலஸ்தீனாவை வீழ்த்தி பட்டயத்தினாலும், அக்கினியினாலும், பஞ்சத்தினாலும் எருசலேம் நகரத்தை பிடித்தபொழுது அவர்களுடைய தண்டனையின் காலம் ஆரம்பமானது. அந்த சமயத்தி லிருந்துதான் இஸ்ரவேலர் உலகத்திலுள்ள பல்வேறு தேசங்களில் ஒவ்வொரு நாட்டிலும் சிதறிப் போயினர். கிறிஸ்துவின் நாமத்தை சொந்தம் கொண்டாடும் கிறிஸ்தவ நாடுகள் என்றழைக்கப்படும் நாடுகளிலுள்ளவர்களால் யூதர்கள் துன்புறுத்தப்பட்டனர். சிலுவைப் போரில் சிலுவைக் கொடியின் கீழ் இராணுவம் பாலஸ்தீனாவிற்கு சென்ற போது மாபெரும் அந்திகிறிஸ்துவின் அமைப்பின் மூலமாகவும் இவர்கள் துன்புறத்தப்பட்டனர். போப் இன்னஸண்ட் III –ன் சிந்தனையில் பிறந்த புலனாய்வு மற்றும் விசாரணையின் மூலம் ஐரோப்பா, மெக்ஸிகோ, மற்றும் தென் அமெரிக்கா போன்ற நாடுகள் முழுவதிலும் இருந்த மிகுந்த உண்மையான கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாமல் யூதர்களும்கூட துன்புறுத்தப்பட்டனர். இஸ்ரவேலரின் விலகிச் செல்லும் குருட்டாட்டத்தைப் பற்றி வேதாகமம் குறிப்பிடுவதை சற்று நாம் பார்க்கலாம். ரோம. 11 : 25 – ல் நமக்கு இஸ்ரவேலின் இரட்டிப்பைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. முன்பு இஸ்ரவேலின் அனுபவங்கள் இரண்டு வித்தியாசமான காலப்பகுதிகளில் இரண்டு வித்தியாசமான வழிமுறைகளில் ஏற்பட்டன. 1845 வருடங்கள் தேவன் இவர்களுக்கு அனுகூலமாக கொடுத்த முதல் காலப்பகுதியானது கி.மு. 1813 – ல் யாக்கோபின் மரணத்திலிருந்து ஆரம்பித்து கி.பி. 33 – ல்

முடிவடைந்தது; கி.மு (B.C) என்றுள்ள இந்தப் பெயரை நாம் பார்க்கும் போது இதைக்குறித்து ஏதாவது கூற வேண்டும் என்று சிந்திக்க வைக்கின்றது. சமீப காலங்களில், கடந்த சில வருடங்களில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் ஆசிரியர்களோ அல்லது எழுத்தாளர்களோ 1813 B.C என்று ஒருபோதும் எழுதுகிறதில்லை. ஆனால் 1813 BCE என்றே பதிவு செய்துள்ளனர். B.C.E. என்றால் Before Common Era அதாவது 'பொதுவான சகாப்தத்திற்கு முன்பு' என்று பொருள்படுகிறது. B.C. என்றால் 'கிறிஸ்துவுக்கு முன்' என்பதாகும். அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு முன் Before Christ's Birth. கிறிஸ்தவ மார்க்க சம்பந்தமான குறிப்புகளை நீக்கிப் போட வேண்டுமென்றே நாடினர். முகமதியினரையோ அதாவது முஸ்லீம்களையோ மற்றும் மற்ற புற சமயத்தவர்களையோ வெறுப்பேற்ற அவர்கள் விரும்பவில்லை. ஆகையினாலே அவர்கள் இயேசுவானவர் இந்த பூமிக்கு வந்த போது ஏற்பட்ட காலப் பிரிவை அதாவது கி.மு., கி.பி. என்பதை, அங்கீகரிக்கவும்கூட விரும்புகிறதில்லை. பல நூற்றாண்டுகளாக நமது நாள்காட்டிகளில் இது (B.C) என்ற பதம் இருப்பதற்கு காரணமான அவருடைய ஊழியம், அவருடைய பணிகள், அவருடைய சிலுவை மரணம் ஆகியவைகளையும் அங்கீகரிக்க விரும்புகிறதில்லை. யூதருடைய சரித்திரத்தின் இரண்டாவது காலப்பகுதி கி.பி. 33 முதல் கி.பி. 1878 வரையிலாக பிரிக்கப்பட்டது. இந்த இடைப்பட்ட வருஷங்களில் யூத ஜனங்கள் தங்களுடைய பாவங்களுக்காக தேவனிடமிருந்து தங்களுடைய தண்டனைகளின் பகுதியாக, அதிகப்படியான துன்பங்களை சகித்தனர். 1878 – ல் காரியங்கள் நன்மைக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாறுவதற்கு ஆரம்பமானது. தீர்க்கதரிசனங் களிலும், பல்வேறு வழிகளிலும் இஸ்ரவேல் தேவனிடமாக தயவைப் பெற ஆரம்பித்தது. தேவன் தமது தயவை அவர்களுக்கு அளித்தார். அவர்களுக்கு முதலில் அதிகமாக அல்ல கொஞ்சமாகவே தயவை அளித்தார். ஏசா. 40: 2 – ல் "எருசலேமுடன் பட்சமாய் பேசி அதன் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் (தேவனுடைய கையில்) 'இரட்டிப்பாய்' அடைந்து தீர்ந்தது என்றும் அதற்கு கூறுங்கள்" என்று நாம் வாசிக்கின்றோம். "இரட்டிப்பு" – என்பது இரண்டு சமமான காலப் பகுதி என்று அர்த்தப்படுத்தப்படும். இதில் முதல் பகுதி யூதயுகத்தில் 1845 வருடங்களைக் கொண்ட தயவுள்ள காலம், இரண்டாவது பகுதி சுவிஷேச யுகத்தில் 1845 வருடங்களை கொண்ட தண்டனைகளும், சிட்சைகளும் கொண்ட காலமாகும். (ஆமோ. 3 : 2).

இப்போது நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இஸ்ரவேலரின் தலைமுறையினர்களை கவனத்தில் கொள்ள வேண்டும். தேவ தயவு இவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. கல்லறைக்கு சென்றவர்களுக்கும் கூட இது நீட்டிக்கப்பட்டுள்ளது எசேக் 37 : 12-14 "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார். இதோ என் ஜனங்களே நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து உங்களை உங்கள் பிரேதக் குழிகளிலிருந்து வெளிப்படவும் உங்களை இஸ்ரவேல் தேசத்திற்கு வரப்பண்ணுவேன்". ஆயிர வருட யுகத்தில் ஜீவிக்கத்தக்கதாக மரித்தோரின் உயிர்த் தெழுதலைக் குறித்த விவரணம் என்று நாம் வழக்கமாகவே புரிந்துக் கொள்ளுகிறபடி இந்த வசனம் இல்லை. இந்த வசனம் சொல்லர்த்தமான மரணநிலையிலிருந்து ஏற்படும் உயிர்த் தெழுதலை அல்ல, ஆனால் ஒரே தேசமாக இஸ்ரவேலை உயர்த்துவதற்கு கூட்டிச் சேர்க்கப்பட்டதையே இது அர்த்தப் படுத்துகின்றது. இது பள்ளத்தாக்கிலுள்ள உலர்ந்த எலும்புகளாக எசேக்கியாவின் தரிசனத்தின்மூலம் அடையாளப்படுத்தி வர்ணிக்கப்பட்டுள்ளது. எசேக்.37 : 11-ல் "**மனுபுத்திரனே இந்த எலும்புகள் இஸ்ரவேல் வீட்டார் அனைவருமே**" என்று இதைக் குறித்துக் கூறுகின்றார். இந்த தீர்க்கதரிசனத்தில் சொல்லப் பட்டுள்ள இந்தப் பெரிய பள்ளத்தாக்கின் எலும்புகள் உருவகமாக யூத ஜனங்களைக் குறித்து சித்தரிக்கப்பட்டுள்ளது. வருங்காலத் தைக் குறித்த இவர்களுடைய நம்பிக்கைகள் அநேக நூற்றாண்டுகளாக உலர்ந்தும் இழந்தும் போனது. ஆனால் 1878 – லிருந்து மறுபடியும் உயிர்ப்பித்து 1948-ல் உலகத்திலே ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டது. எசேக்கியேல் தரிசனத்திற்கு மறுபடியும் திரும்பி பார்க்கும் போது அங்கு உடலின் பல்வேறு பாகங்களான தசைநாரும் தசைகளும் போன்றவைகள் எலும்புகளிடத்தில் கொண்டு வரப்படும் என்று பார்க்கிறோம். இந்த எலும்புகளின் மேல் மாம்சத்தை மூடப்பண்ணுவார். அதன்பிறகு இந்த ஜனங்கள் உலகத்தின் விவகாரங்களில் ஒரு தேசமாக மறுபடியும் ஜீவனையடைந்து வருவர். அது எதை அர்த்தப் படுத்துகிறது என்றால் வேதாகம தீர்க்கதரிசனத்தின் நிறைவேறு தலில் உலக சமுதாயத்திற்குள் இஸ்ரவேலின் முக்கியத்துவமும் ஆயிர வருட யுகத்துக்கான தேவனுடைய திட்டத்திலுள்ள அதனுடைய விஷேசமான பந்தத்தின் முக்கியத்துவத்திற்கும் மறுபடியும் கொண்டு வரப்படும் என்பதேயாகும்.

நம்முடைய கவனத்திற்கென்று நாம் எடுத்துள்ள பகுதி என்னவென்றால் வேதாகமத்தில் முன்னுரைக்கப்பட்டுள்ளதான இஸ்ரவேலரின் மற்றொரு பரீட்சைக்குரிய துன்ப அனுபவங் களைக் கொண்ட மற்றொரு உபத்திரவ காலமாகும். அது இப்பொழுது குறிப்பிட்ட அளவு மாத்திரமே நிறைவேற உள்ளது. எனினும் அதின் சில காரியங்கள் இன்னும் கூடிய சீக்கிரத்திலும் வருங்காலத்திலும் சம்பவிக்கக்கூடியதாக இருக்கின்றது. இவை ஒட்டுமொத்தமாக யாக்கோபின் இக்கட்டுக்காலம் என்று குறிப்பிடப்பட்டு எரே. 30 : 7, 11-ல் பதிவு செய்யப்பட்டும் உள்ளது. "ஐயோ அந்த நாள் பெரியது. அதை போலொத்த நாளில்லை. அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம், ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்". வசனம் 11 – ல் "உன்னை இரட்சிப்பதற்கு நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்காமலும் முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய் தண்டிப்பேன்" என்பதாகும். பழைய ஏற்பாட்டில் காத்தர் என்ற வார்த்தை கொடுக்கப்பட்டிருப்பதால் அது எப்போதுமே யெகோவா தேவன் என்றே அர்த்தப்படுத்தும். இந்த காரணத்தினாலேயே ஆங்கில KJV – வேதாகமத்தில் இந்த வார்த்தையானது பெரிய (capital) எழுத்துகளில் எழுதப் பட்டுள்ளது. ஆக அது யேகோவா தேவனையே குறிக்கிறது. சரி, நமது வசனத்தில் "உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உன்னை சிதறப்பண்ணின எல்லா ஜாதிகளுக்கும் முழுமையான அழிவைக் (முடிவைக்) கொண்டு வருவேன்," (ஆங்கில வேதாகமம் பார்க்கவும்) என்று தேவன் சொல்லுகிறார். தற்போதைய காலத்தில் இதனுடைய முடிவானது இன்னும் நிறைவேறப்படாத தீர்க்கதரிசனமாக உள்ளது என்பதை கவனியுங்கள். இதே தீர்க்கதரிசனம் இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டபோது கி.பி. 33-ற்கு பிறகு இஸ்ரவேலர் சிதறிப் போன தேசங்களை குறித்து பேசுகின்றது. "நான் உன்னை சிதறப்பண்ணின எல்லா ஜாதிகளுக்கும் முழுமையான அழிவைக் (முடிவைக்) கொண்டு வருவேன்". ஐரோப்பா, ஆஸ்டிரியா, ஹங்கேரி, ரஷ்யா மற்றும் அவைகளிலுள்ள நாடுகளிலும் சிதறடிக்கப்பட்டனர். ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ்

மற்றும் அமெரிக்காவிலும் கூட சிதறிப் போயினர். நான் இந்த ஜாதிகளுக்கு ஒரு முடிவை உண்டுப்பண்ணப்போகிறேன் என்று கர்த்தர் இங்கு சொல்லுகிறார், இது சரிதானே? அப்படியென்றால் அவர் அமெரிக்காவையும் இதில் சேர்த்துத் தானே கூறுகிறார். அமெரிக்க பிரதமரும் காங்கிரசும் U.S.A.-வை ஒரு முடிவுக்கு வழிநடத்தி நாசமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த வசனம் தொடர்ந்து கூறுவது யாதெனில் "இஸ்ரவேலே உனக்கோ ஒரு முழுமையான அழிவை நான் உண்டாக்கமாட்டேன், ஆனால் நான் உன்னை நீதியிலே சீர்திருத்தி அதிலே நீ போகும்படிக்கு நான் செய்வேன் அதேசமயம் நான் உன்னை முற்றிலும் தண்டியாமலும் விடாதிருப்பேன்" - (ஆங்கில வேதாகமம் பார்க்கவும்). ஆக இஸ்ரவேலரின் பாவங்கள், நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளுவதிலுள்ள இவர்களின் தோல்வி, சுவிசேஷ செய்தியை நிராகரித்தது, தங்களது மேசியாவை நிராகரித்தது ஆகிய இவைகள் எல்லாவற்றிற்காகவும் தேவன் அவர்களை தண்டித்தார். அவருக்காக அவர்களை தண்டிப்பதற்கு அவர்களுடைய சத்துருக்களையே அனுமதித்தார்.

வேத வாக்கியங்களின் மூலம் யாக்கோபின் இக்கட்டு இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படுகிறது என்று நாம் அறிகிறோம். வேதாகம பாஷையில் இந்த இரண்டு பகுதிகள் இரண்டு வெவ்வேறு வேலைகளில் ஈடுப்பட்டிருந்த நபர்களின் மூலமாக நடந்தேறியது என்று பார்க்கிறோம். இதில் முதல் வகுப்பார் அடையாளமாக "மீன்பிடிப்பவர்கள்" என்றழைக்கப்படுகின்றனர். இதனை தொடர்ந்து இரண்டாவதாக இதனை செய்பவர்கள் அடையாளமாக "வேட்டைக்காரர்கள்" என்றழைக்கப் படுகின்றனர். இது எரே. 16 : 15, 16-ல் அடையாளமாக சொல்லப்பட்டுள்ளது. "இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும் (ரஷ்யா) தாம் அவர்களை துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணுவார்" அதாவது இஸ்ரவேல் சிதறடிக்கப்பட்ட எல்லா நாடுகளிலிருந்தும் அவர்களை வரப்பண்ணுவார். அநேக வருடங்களாக இந்த நாடுகளிலே இவர்கள் சுகமாக இருந்தனர். இதன் பின்னர் அவர்களுடைய உபத்திரவங்களும் துன்பங் களும் மிகக் கொடியதாக ஆரம்பித்தது.

"நான் அவர்கள் பிதாக்களுக்கு கொடுத்த அவர் களுடைய தேசத்துக்கு அவர்களை திரும்ப வரப்பண்ணுவேன்" என்கிறார். பாஸ்டர் ரஸல் அவர்கள் தமது முந்திய ஊழியப்பணிகளின் போது யூதர்களுக்கான சுயதேசத்தை ஸ்தாபிப்பதற்கு பல்வேறு அமைப்புகளின் மூலம் பணியாற்றப் பட்டு வருகிறது என்று எழுதினார். நான் சற்றே முன்னேறிச் சென்று இந்த வசனத்தை வாசிக்கிறேன். எரே. 16 : 16-ன் வசனத்தை படிக்கும்போது, "இதோ நான் மீன்பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன், இவர்கள் அவர்களை பிடிப்பார்கள் ,அதற்கு பின்பு வேட்டைக்காரராகிய அநேகரை அழைத்தனுப்பு வேன். இவர்கள் அவர்களை எல்லா மலைகளிலும் எல்லா குன்றுகளிலும் கன்மலைகளின் வெடிப்புகளிலும் வேட்டை யாடுவார்கள்". இப்போது மீன்பிடிப்பவர்களை பற்றி பார்க்கலாம். மீன்பிடிக்கிறவர்கள் சில குணலட்சணங்களை கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் அறிவீர்கள். மீன்பிடிக்கிறவர்களுக்கு அதிகப்படியான சக்தி தேவை. அவர்கள் மீனைப்பிடிப்பதற்கு தூண்டிலில் ஒரு ஆகாரத்தை வைப்பார்கள். மீன்பிடிக்கிறவன் தூண்டிலில் வைப்பதற்க்கான ஆகாரத்தை தன்னுடைய விருப்பப்படி நன்றாக தெரிந்தெடுத்துக்கொள்ள வேண்டும். அவன் பிடிக்கும் மீனானது இரைக்காக தூண்டிலைக் கடிக்கும் விதமாக அதனைத் தூண்டும் விதமாக எத்தகைய பூச்சிகளின் அடையாளங்கள் மாதிரிகள் சரியாக இருக்கும் என்று தேர்வு செய்வான்.


இந்த மீன்பிடிக்கின்ற கதையானது வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள இஸ்ரவேலர் சுயதேசத்தை நாடியதற்கான விளக்கமாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. யூத ஜனங்கள் தங்களுடைய சுயதேசம் திரும்புவதற்கு சில விசேஷமான ஜனங்கள் ஆதிக்கம் செலுத்தியும், முயற்சி செய்தும் வந்தனர். இவர்கள் பலமுறைகளை கையாண்டு இஸ்ரவேலர்களுக்கு தங்களுடைய சுயதேசத்திற்கு திரும்ப வேண்டும் என்ற ஆசையைத்தூண்டினர். இஸ்ரவேலர் ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு இடத்திற்கு செல்லும்படியாக யூதர்களால் அமைக்கப்பட்டதான இயக்கம் இருக்கின்றது என்று ரஸல் போதகர் எழுதினார். இதற்காக பல லட்சக்கணக்கானோர் பொருளாதார உதவி செய்து ஆதரவாக இருந்தனர். சிலர் ஆயிரக்கணக்கான பணத்தை சம்பாதித்து, அர்ஜன்டினா, தென் அமெரிக்காவிலுள்ள யூதர்களுக்கு அங்கே அவர்களுக்கான இடத்துக்காக கொடுத்தும் வந்தனர். இந்த சமயத்தில் ரஸல் போதகர் எழுதும்போது இப்படிப்பட்ட விஷயங்கள் நல்ல விஷயங்களாக இருந்தாலும் அது ஒருபோதும் சம்பூரணமடையாது என்று எழுதினார். ஏனென்றால் ஆண்டவர் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி யூதர்களுக்கான சுயதேசமானது பாலஸ்தீனாவில்தான் இருக்கும். அதாவது - "உங்களுடைய சொந்த தேசம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


1948ல் இஸ்ரவேல் பாலஸ்தீனாவில் ஒரு தேசமாக ஆவதற்கு முன்பாகவே சிதேக்கியாவின் காலத்திற்கு 2500 வருடங்களுக்கு முன்பு சுய ஆட்சி செய்துக்கொண்டிருந்த தேசமாக இருந்து வந்தது. சிதேக்கியா காலத்திற்கு பிற்பாடு கிட்டத்தட்ட 2500 வருடங்களாக சுய ஆட்சி செய்யும் தேசமாக மறுபடியும் உருவாகவில்லை. இவ்வாறு யூதர்கள் ஆயிரமாயிரமான வருடங்களாக மற்ற தேசங்களின் அதிகாரத்தின் கீழ் இருந்து வந்தனர். ரோத்சைல்ட்- உடன் மற்ற செல்வந்தர்களான யூதர்களும் பொருளாதார முயற்சிகளினாலே அர்ஜன்டினாவில் தங்களுக்கென்று ஒரு சுயதேசத்தை ஸ்தாபிக்க முயற்சித்தனர். எதிரிடையாக, இரண்டாம் உலகப் போரின்போது ஜெர்மனியின் மிகப்பெரிய ஆதரவாக இருந்தது அமெரிக்காவிலுள்ள அர்ஜன்டினாத்தான். ஜெர்மனியின் போர்க்கப்பலான க்ராப் ஸ்பே (graff spay) அர்ஜன்டினாவில் உள்ள துறைமுகத்தின் வெளியே பிரிட்டிஷ் கடற்படையினரிடம் சிக்கி அதன் பின் உடைக்கப்பட்டதை நினைவில் கொள்ளுங்கள். ஆகட்டும் இதுவே நடந்த சம்பவமாகும். சீயோனிஸம் என்ற இயக்கம் யூதர்களுக்கான சுயதேசம் பாலஸ்தீனாவே என்று தேவனுடைய வாக்குத்தத்தை அறிவிக்க ஆரம்பித்தது.

யூத பெயர்ச் சபையானது அப்போதும், இப்போதும் யூத ஜனங்களுக்கான தேவனுடைய ஏற்பாடுகளில் தப்பறைக்குள்ளாகவே இருக்கின்றது. இதைப் போலவே கிறிஸ்தவர்களுக்கான தெய்வீக ஆயத்தங்களிலும் முக்கியமாக சம்பந்தம்கொண்ட முதன்மையான கிறிஸ்தவ சபைகளும் உள்ளன. இவர்கள் தங்களுக்கும் யூதர்களுக்கும் உண்மையில் தேவன் கொடுத்துள்ள வாக்குத்தத்தங்கள் என்ன என்பதை குறித்து எவ்வித அறிவும் இவர்களிடத்திலில்லை, அதிக அளவில் பார்த்தோமானால் இதைக் குறித்து இன்னும் அவர்கள் அறியாமல்தான் இருக்கிறார்கள்.

(இந்த பாடம் அடுத்த பத்திரிக்கையில் தொடரும்......)

***






# சோதோமின் அழிவு

# Destruction of Sodom

சோதோமியர்கள் ஒரு மிக வளமான பள்ளத்தாக்கை பெற்றிருந்தார்கள். எனவே முகத்தின் வியர்வையால் அப்பத்தை கொள்ள வேண்டும் என்ற சாபத்தை ஓர் குறிப்பிட்ட அளவில் கிட்டதட்ட தவிர்த்து இருந்தார்கள். இந்த சூழ்நிலைகள் சுயநலத்துக்கும் பாவத்துக்கும் வாய்ப்பாக இருந்தது. இதையே வேதாகமம் இவ்வாறாக அறிவுறுத்துகிறது. “இதோ, ...........கர்வமும், ஆகார திரட்சியும் நிர்விசாரமான சாங்கோபமாகிய இவைகளே உன் சகோதரியாகிய சோதோமின் அக்கிரமம் ........... சிறுமையும் எளிமையு மானவனுடைய கையை அவள் திடப்படுத்தவில்லை. அவர்கள் தங்களை உயர்த்தி, என் முகத்துக்கு முன்பாக அருவருப்பானதை செய்தார்கள். அதை நான் நல்லது என்று கண்டபடியால் அவர்களை ஒழித்து விட்டேன்.” எசே. 16 : 49, 50,

பாவிகளுடைய முடிவுக்கு ஓர் உதாரணமாக வைக்கும் விதமாக சோதோமியர்களை அழிப்பது நல்லது என தேவன் கண்டார். அந்த அழிவு மரணமே, அது நித்திய வேதனை அல்ல என பரி. யூதா கூறுகிறார். “வானத்தில் இருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து எல்லாரையும் அழித்து போட்டது” என்றே இயேசு கூறுகிறார். லூக். 17 : 29.

ஆனால் சோதோமியர்கள் எவ்வித நம்பிக்கையு மில்லாமல் அழிக்கப்படவில்லை என வேதாகமம் போதிக்கிறது. அதாவது அவர்கள் பாவிகளாயிருந்தபோதிலும் தேவனுடைய இரக்கமானது கிறிஸ்துவின் மூலம் அவர்களுக்கும் உரியதே. இயேசுவும், தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலும்கூட மேசியாவின் இரண்டாம் வருகையில் தம்முடைய ராஜ்யத்தில் தற்காலத்தில் ஓர் சந்தர்ப்பத்தைப் பெறாத பொதுவான உலகத்தார் யாவருக்கும் ஓர் சந்தர்ப்பத்தை அல்லது நியாயதீர்ப்பைக் கொடுப்பார் என அறிவிக்கிறார்கள். சோதோமியர்கள் தேவனுடைய கிருபையை கேட்பதற்கும், அதை ஏற்றுக் கொண்டு அதில் மகிழ்வதற்கும் வாய்ப்பை பின்னர் பெறுவார்கள்.

இயேசு, தம்முடைய முதல் வருகையில் எவர்களிடம் போதித்தாரோ அவர்களைக் காட்டிலும் சோதோமியர் மகிமையான யுகத்தில் அதிக அனுகூலமான நிலைமையில் இருப்பார்கள் என கூறுகிறார். அது ஏன் என்று இவ்வாறு விளக்குகிறார். கொரோசீன், பெத்சாய்தா மற்றும் கப்பர்நகூமில் உள்ள மக்களுக்கு கொடுக்கப் பட்ட அதே வாய்ப்பு சோதோமியர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தால் இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள் என்று விளக்குகிறார். இதன் காரணமாக, எதிர்கால சோதனை காலமானது இந்த செய்தியை கேட்டு நிராகரித்த மக்களை காட்டிலும் “அதிக இலகுவாய் சோதோமியர்களுக்கு இருக்கும்.” மத். 10 : 15; 11 : 21-24.



எசேக்கியேலுடைய தீர்க்கதரிசனம் மிகவும் விளக்கமான ஒன்றாகும். (எசே. 16 : 49-61). அது இஸ்ரவேலுக்கான இழந்து போனதைத் திரும்ப கொடுத்தலையும் ஆசீர்வாதத்தையும் அறிவிக்கிறது. மேலும் அதே நேரத்தில் புதிய உடன்படிக்கையின் கீழ் அதாவது மேசியாவின் இராஜ்யத்தின் கீழ் சோதோமியர்கள் தேவனிடம் இருந்து சகாயத்தை பெற்றுக்கொள்வார்கள் என்பதையும் குறிப்பிடுகிறது.

“தேவனுடைய இரக்கத்தின் அகலம்
சமுத்திரத்தின் அகலத்தைப் போன்றது.”

## பாடம் 24–க்கான கேள்விகள்

1) ஆதி. 19 : 15, 16, 24, 25; மத். 10 : 15; 11 : 21-24. இவைகளை வாசித்த பிற்பாடு கர்த்தர் ஏன் சோதோமியர்களை அழித்தார் என கூறு.

2) இந்த மக்களை அழிப்பது தேவனுடைய நீதிக்கு இசைவாயிருந்ததா? எசே. 16 : 49, 50 பாரா. 1

3) சோதோமின் அழிவில், எத்தனைபேர் தப்பினார்கள், மேலும் அது எவ்வாறு செய்து முடிக்கப்பட்டது? அது எதை சித்தரிக்கிறது?

4) லோத்தின் மனைவிக்கு என்ன சம்பவித்தது? அவள் திரும்பிப் பார்த்தது எதைக் காண்பிக்கிறது? ஆதி. 19 : 17, 26; S. Vol. 3, page 194.

5) சோதோம் எதை அர்த்தப்படுத்துகிறது? சோதோம் எங்கே இருக்கிறது? வேதாகம அகராதி பார்க்கவும்.

6) லூக். 17 : 29, 30-யை வாசித்து சோதோமியரின் அழிவு எதைக் குறிக்கிறது என கூறு? 2 பேது. 2 : 6; யூதா 7-யும் பார்க்கவும்.

7) யூதா 7-ல் குறிப்பிடப்பட்டிருக்கும் “நித்திய அக்கினியானது” நித்திய வேதனையை அடையாளப்படுத்தவில்லையா? ஏன்? அது அப்படி இல்லையென்றால் அதனை விளக்கு. எசே. 16 : 53, 55; மத். 10 : 15-ஐ பார்க்கவும், அது எதை சித்தரிக்கிறது?

8) இயேசு அவர் பிரசங்கித்த நகரங்களைக் காட்டிலும் “நியாயத்தீர்ப்பு நாளில் ......... சோதோம் கோமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்” என்பதை கூறும்போது எதை அர்த்தப்படுத்துகிறார்? மத். 10 : 15

9) தேவனுடைய இரக்கத்தின் அகலத்தை பற்றி உன்னால் இயன்றதை கூறு. அவருடைய குமாரனுடைய மரணத்தின் மூலம் எவ்வளவு பேர் பயனடைவார்கள்? அனைவரும் ஒரே வெகுமதியை பெறுவார்களா? பாரா. 3

10) சோதோமியர்கள் அழிக்கப்படாமல் வாழ அனுமதிக்கப்பட்டிருந்தால் உயிர்த்தெழுதலின் காலத்தில் நல்ல சூழ்நிலையாக இருக்குமா? அல்லது கெட்ட சூழ்நிலையாக இருக்குமா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? பாரா. 4

11) லோத்து தன்னை அநீதி உள்ளவர்களோடு இணைத்து கொண்டதிநிமித்தம் எதை ஆதாயப்படுத்திக் கொண்டான்? எதை இழந்தான்?

12) இதிலிருந்து நான் என்ன பாடங்களைப் பெறுகிறோம்? பாரா. 5

(குழந்தைகளுக்கு பொருத்தமானதாகும்.)

***

# பரிசுத்த பெரும் பாதை

## THE HIGHWAY OF HOLINESS

***"அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்: அது பரிசுத்த வழி என்னப்படும்"***

***ஏசாயா 35 : 8***

நெருக்கமான வழிக்கு மாறாக (இரகசியமான வழி அல்லது மறைவான வழிக்கு மாறாக) பெரும்பாதையானது, எல்லாரும் பிரவேசிப்பதற்காக திறந்து வைக்கப்பட்ட ஓர் பொதுவான வழியாகும். பரிசுத்த பெரும்பாதை என்பது ஆயிர வருஷ யுகத்தில் உலக மனுக்குலத்திற்கு இழந்து போன ஆசீர்வாதங்களை திரும்ப கொடுக்கப்படும்போது, பரிசுத்தத்திற்கு இசைவான இந்த அடையாளமான பாதையில் நடக்க வாய்ப்பளிக்கப்படும். இது சுவிசேஷ யுகத்தில் திறக்கப் பட்டிருக்காது என நாம் அறிந்திருக்கிறோம். அது ஏனென்றால், முதலாவதாக, ஜீவனுக்கு போகிற நெருக்கமான வழி (மத். 7 : 14) என்ற மற்றொரு வழி சுவிசேஷ யுக காலத்தில் திறக்கப்பட்டிருக்கும். இரண்டாவதாக, பெரும்பாதையான வழி திறக்கப்பட்டிருக்கும் போது சம்பவிக்கும் நிலைமைகள் சுவிசேஷ யுகத்தின் நிலைமைகளுக்கு சற்றே வித்தியாசமானதாகும். (ஏசா. 35 : 8, 9). மூன்றாவதாக, சில குறிப்பிட்ட நிறைவேறாத சம்பவங்கள் சம்பவிக்கும் முன் அவை திறக்கப்படாது. குறிப்பாக, சுவிசேஷ யுக தெரிந்தெடுப்பு முடிவடையவும், உபத்திரவ காலமும், இராஜ்யத்தின் ஆயத்தங்களும் நிறை வடைய வேண்டும். இந்த பெரும்பாதையான வழி மிக அவசியமானதாகும். ஏனெனில் முதலாவதாக, தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் (ஏசா. 35 : 8); இரண் டாவதாக, கிறிஸ்துவின் மீட்கும்பொருள் (யோவா. 12 : 32, 33; ரோம. 5 : 18, 19); மூன்றாவதாக, சபையின் பாடுகள் (ஏசா. 60 : 14, 15); நான்காவதாக, உலகத்தின் தேவைகள் (ரோம. 8 : 22). ஆகையால் பெரும்பாதையான வழி மிகவும் அவசியமானதாகும்.

இந்த பெரும்பாதையின் பிரகாசமானது சத்தியத்தைக் குறித்த தெளிவை கொடுக்கிறது. (ஏசா. 29 : 18, 24; 35 : 5; யோவா. 1 : 9). இந்த போதனைகள் தெளிவானதும் (ஏசா. 35 : 8; எரே. 31 : 34), குணசாயலில் மிகுதியானதுமா யிருக்கிறது. (ஏசா. 11 : 9; 35 7). நீதி செய்வதற்கு இந்த பெரும்பாதை உதவிகரமாயிருக்கும், சாபத்தின் விளைவுகளி லிருந்து விடுவிக்கும். (ஏசா. 61 : 4), இழந்து போனதை திரும்ப கொண்டுவரும் (எசே. 36 : 35; ஏசா. 35 : 1, 2); ஒவ்வொரு தீய காரியங்களை அழிப்பதில் துணை நிற்கும். (வெளி. 20 : 1-3); சங். 72 : 9), ஒவ்வொரு நற்காரியங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஏதுகரமாகவும், மனுக்குலம் சீர்திருத்தம் அடைவதற்கு உதவிகரமாகயிருக்கும் (சங். 72 : 8); பாவமும் தப்பறையும் படிப்படியாக அதின் மூலமாய் துடைக்கப்படும் (ஏசா. 25 : 7, 8); நீதி படிப்படியாக ஸ்தாபிக்கப்படும் (சங். 72 : 7; ஏசா. 60 : 21), சத்தியம் எல்லா இடங்களிலும் உயர்த்தப்படும். (ஏசா. 11 : 9; 29 : 18, 24); சாபமும் சுமைகளும் வழிகளிலிருந்து எடுத்து போடப்படும் (ரோம. 8 : 21); துயரம் நீக்கப்பட்டு, சந்தோஷம் நிலைநிறுத்தப்படும். (ஏசா. 35 : 10); யுத்தங்கள் ஓய்ந்து சமாதானம் பரவும் (சங். 46 : 9; 72 : 7; ஏசா. 2 : 4; 9 : 7); துன்மார்க்கர் உயர்த்தப்படுவதற்கு பதிலாக தாழ்த்தப்படுவார்கள். (சங். 37 : 34-38); இப்போது ஒடுக்கப்படும் துன்பப்படுகிற நீதிமான்களோ உயர்த்தப்படுவார்கள். (சங். 72 : 7; ஏசா. 60 : 14, 13); கள்ள போதகர்களும் போலி சபையும் அழிக்கப்படும். (2 பேது. 2 : 1; வெளி. 2 : 20-23), உண்மையான போதகர்களும் உண்மையான சபையும் ஸ்தாபிக்கப்படும். (1 கொரி. 6 : 2, 3); துன்மார்க்க ஜாதிகள் அழிக்கப்படுவார்கள் (ஏசா. 60 : 12), நீதிமான்களுக்கு உதவி செய்யப்படும் (கலா. 3 : 8; வெளி. 15 : 4); ஏழ்மையானவர்கள் இனி ஒருபோதும் வெறுக்கப்படமாட்டார்கள். (சங். 72 : 12-14; 107 : 41); ஒவ்வொருவருக்கும் தனக்கு சொந்த வீடு உடையவர்களாக இருப்பார்கள், எந்தவொரு நில முதலாளி களும் யாரையும் வெளியேறு என சொல்வதற்கு இருக்க மாட்டார்கள். (ஏசா. 65 : 22; மீகா 4 : 4); அவர்கள் விருதாவாக வேலை செய்வதுமில்லை. (ஏசா. 65 : 23); தங்களுடைய செய்கையினால் அனைவரும் செழிப்பார்கள். (ஏசா. 60 : 17; 65 : 23); துன்மார்க்கம் அடக்கப்படும் (சங். 107 : 42); நீதி சூழ்ந்திருக்கும். (ஏசா. 61 : 11).

அடுத்ததாக, இந்த பெரும்பாதையில் பயணிக்க போகிற பயணிகளை குறிப்பிடுகிறோம். அது உலகமனைத்தும் அதில் பயணிக்கும் பயணிகளாக இருப்பார்கள். (சங். 98 : 3; ஏசா. 40 : 5; யோவா. 1 : 9; 1 தீமோ. 2 : 4); இதின்மேல் பயணிக்கிறவர்கள் ஓர் குறிப்பிடப்பட்டவர்கள்தான், ஏனெனில் சீர்திருத்தம் அடையாதவர்கள் மரணத்திற்குட்படுத்தப்படுவார்கள், அல்லது 100 வருட முடிவில் பாவிகள் என்று தீர்க்கப்பட்டு மரணத்திற்குட்படுத்தப்படுவார்கள் அல்லது 1000 வருட முடிவில் நன்மையினால் தங்களுடைய நாட்களில் பூர்த்தி செய்யாதவர் களும் மரணத்திற்குட்படுத்தப்படுவார்கள். (ஏசா. 65 : 20; 35 : 8; எரே. 31 : 29, 30; எசே. 18 : 4, 20; அப். 3 : 23; வெளி. 20 : 7-9). இந்த பாதையில் பயணிப்பவர்கள் யாவரும் தேவனுடைய வார்த்தையை கற்றுக் கொள்வார்கள். (ஏசா. 35 : 5), தேவனுடைய வார்த்தையை பரப்புவார்கள் (ஏசா. 35 : 6; சங். 107 : 22), தேவனுடைய வார்த்தையை அப்பியாசிப்பார்கள் (ஏசா. 35 : 6; எசே. 36 : 25, 27). இந்த பெரும்பாதையான வழி முடிவில் இழந்து போனதை திரும்ப பெறுதலுக்கு வழிநடத்தும் (அப். 3 : 19-21; ரோம. 8 : 21; ஏசா. 60 : 21 மற்றும் சங். 72 : 6, 16). உலக மனுக்குலமானது முற்றிலும் சீரடைவதற்கு பரிசுத்த பெரும்பாதை ஓர் வழியாக இருக்கும் என்பதைக் காண்கிறோம். கூடுதலான விபரங்களுக்கு, யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு புத்தகத்தில் அத்தியாயம் 11-ஐ பார்க்கவும்.

***

# *காலத்துக்கு ஏற்ற மன்னா*

## ஜனவரி – 1

**சங்கீதம் 66 : 8, 9**

**ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து, அவரைத் துதிக்கும் சத்தத்தைக் கேட்கப் பண்ணுங்கள். அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல், நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்.**

தேவனுடைய கிருபை மற்றொரு வருஷத்திலும் நம்மைப் பாதுகாத்து "நாம் விழுந்து போகாமல்" காப்பாற்றியதற்காக அவருக்கு ஸ்தோத்திரம். அதனால் நம்மில் பலர் அவருடைய வசனத்திலும் அதனுடைய ஊழியம் சம்பந்தமானவற்றிலும் இன்றுவரை ஏக மனமும் ஏக சிந்தையும் உள்ளவர்களாய் இருக்கிறோம். உண்மையில் அவருடையவர்களல்லாதவர்கள் அனைவரையும் கொழித்தெடுக்கும்படி "கொடிய வஞ்சகங்களைக்" கொண்டுவர எதிராளியானவன் அனுமதிக்கப்பட வேண்டியதாயிருக் கிறதென்பதை நாம் நினைவு கூரும்போது (2 தெச. 2 : 10-12) மற்றொரு வருஷ ஆரம்பத்திலும் நாம் சத்தியத்தைப் பாராட்டி இதுவரை உறுதியுடன் நின்று எல்லா தேவ ஏற்பாடுகளுக்கும் பூரணமாக இசைந்து நடப்பதால், நாம் விழுந்து போகாமல் அவர் நம்மைக் காப்பாற்றி வருகிறதைக் காண்பது நிச்சயமாக நமது ஸ்தோத்திரத்தைத் தேவனுக்குச் செலுத்த அழைப்பதாயிருக்கிறது.

- Z '03, 3 (R 3125)

* * *

தேவனுடைய மெய்யான ஜனங்கள் அவருடைய வசனத்தைப் புகழ்ந்து பேசவும் அவருடைய குணவிஷேடங்களை ஒன்று சேர்க்கும் செய்தியை அறிந்து கொள்ளவும் தக்கதாக ஒருவருக்கொருவர் புத்தி கூறுகின்றனர். அவருடைய மெய்யான ஜனங்களை அவர்களின் ஜீவிய ஓட்டம் முழுவதிலும் நிலைத்திருக்கும்படி அவர் பாதுகாத்து வருகிறார். அவர்கள் கவிழ்க்கப்படவோ, அவர்கள் நிற்கிற கற்பாறையாகிய கிறிஸ்துவில் அவர்களுடைய ஸ்தானத்தை இழக்கவோ அவர் அனுமதிப்பதில்லை, அனுமதிக்கப் போவதுமில்லை.

*–P '35, 182.*

| | | |
|---|---|---|
| ஒத்தவாக்கியங்கள் | : | யோவேல் 2 : 26; சங். 103; 104 : 1; 105 : 1–7; 91 : 1–16; 92 : 1–5, 10–15; ரோம. 8 : 31–39; 1 பேது. 1 : 2–9; யூதா 24, 25; சங். 40 : 1–4; 115 : 18; 145 : 1, 2; ஏசா. 33 : 16; மத். 10 : 28–31 |
| பாமாலைகள் | : | 34, 235, 236, 237, 238, 145, 120. |
| அருணோதய கீதம் | : | 274 – நமக்கு முன்னுள்ள வருடம் |
| கோபுர வாசிப்பு | : | Z '14, 216 (R 5500) |
| வினாக்கள் | : | இந்த வாரத்தில் நான் அவருடைய துதியை அறியச் செய்தேனா? அது எவ்வாறு என்னை ஊக்கப்படுத்தி நான் விழுந்து போகாமல் என்னைக் காப்பாற்றியது? இந்த வருஷத்தில் அவரை ஸ்தோத்தரிப்பதற்காக நான் என்ன செய்யப் போகிறேன்? |

## அறிவிப்பு

**நமது கர்த்தருடைய ஞாபகார்த்த பஸ்கா 2011 ஏப்ரல் மாதம் 15–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்குமேல் என்பதை அறிவிக்கிறோம்.**

**கர்த்தருக்குள் அன்பான சகோதர சகோதரிகள் யாவருக்கும் எங்கள் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.**

Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :*

**Bro. V. Vincent Jeyakumar**

Laymen's Home Missionary Movement

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**